விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 231 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை (07.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட

## இலங்கை இராணுவ அதிகாரிகளை கைதுசெய்ய நடவடிக்கை எடுங்கள்

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்



(கொழும்பு)

இலங்கையில் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சிலெட் வலியுறுத்தியுள்ளார்.

அதற்காக சர்வதேச நீதி அமைப்பை பயன்படுத்துமாறும் 47 நாடுகளின் தலைவர்களிடம் மிச்சேல் பச்சிலெட் கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட 58 இராணு 19

## அரசுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக கொழும்பில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடியை அடுத்து மக்கள் போராட்டம் வெடித் 19

யாழ். - சென்னை

## விமான சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு மீண்டும் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சென்னை 19

திங்கள் முதல்

## எரிவாயு, உணவுப் பொதி, தேநீர் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் உள்நாட்டு எரிவாயு 19

## சர்வகட்சி வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி ரணில் மும்முரம்!

- பேச்சுவார்த்தைகள் வெற்றி
- திறமை அடிப்படையில் அமைச்சுப் பதவி
- சர்வகட்சி அரசிற்கான முன்மொழிவுகள் நாளை அறிவிக்கப்படும்



சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் போது அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் செவிமடுத்து திறமைகளின் அடிப்படையில், அமைச்சு பொறுப்புக்களை பகிர எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் சர்வகட்சி அரசாங்கத்துக்காக 19

## கொழும்பில் வேகமெடுக்கும் கொரோனா உப திரிபு

(கொழும்பு)

கொழும்பிலும், அதனை அண்டிய பகுதிகளிலும், கொரோனா உப திரிபு ஒன்று வேக 19

## அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்காது நாட்டைக் கட்டியெழுப்பத் தயார்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அமைச்சு பொறுப்புக்களை ஏற்காது நாட்டை கட்டியெழுப்பும் பொது வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தெரணியகல பகுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத் 19

## தாய்வான் அருகே சீனா போர் ஒத்திகை



18 ஆம் பக்கம் பார்க்க

உணவுப் பாதுகாப்பிற்காக

## 490 மில். ரூபாய் நிதியை வழங்கியது நோர்வே

(கொழும்பு)

இலங்கையில் வாழும் பின்தங்கிய சிறுவர்கள் மற்றும் பெண்கள் முகங்கொடுத்திருக்கும் உணவுப்பாதுகாப்பு மற்றும் போசனைசார் நெருக்கடிக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 19

துப்பாக்கிச் சூடு

## நேற்றும் ஒருவர் பலி



3 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் தேவைகளை பூர்த்திசெய்யத் தயார்

ஐ.நா. பொதுச் செயலாளர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானத்தைக்கட்டியெழுப்புதல், நிலையான அபி 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டில் அவசரகாலசட்டம் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டதன் பின்னர் அவசர காலச் சட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்த விருப்பமில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டின் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், அலுவலகம், பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பன கைப்பற்றப்பட்டன. எனது வீடு தீப்பிடித்து எரிந்தது. பிரதமர் அலுவலகத்தை கைப்பற்றினார்கள். இறுதியாக பாராளுமன்றத்தை கைப்பற்ற வந்தடைந்தவுடன் அது நிறுத்தப்பட்டது.

நாட்டின் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டும் போது, அவசர கால சட்டத்தை நான் சுமக்க விரும்பவில்லை. குறைந்தபட்ச பாதுகாப்புக்காகவே இந்தச் சட்டம் அமுலில் உள்ளது.

ஒருவேளை பொருளாதார விவகாரங்களில் அவசரகால சட்டம் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்படும். ஏனென்றால், நாம் அனைவரும் ஒப்புக்கொண்டாலும், ஒரு பொதுச் சட்டத்தை நிறைவேற்ற ஏழு அல்லது எட்டு வாரங்களாகும்.

யாராவது நீதிமன்றம் போனால் இன்னும் இரண்டு வாரங்கள் செல்லும். எனினும் அவசர கால சட்டம் விரைவில் முடிவுக்கு கொண்டு வரப்படும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

# பொல்லால் தாக்கப்பட்டு வயோதிபர் படுகொலை

(கொழும்பு)

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வத்தளை, ஹுனுப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 76 வயதுடைய வயோதிபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

# முன்னணி போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் கைது!

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையினரால் தேடப்பட்டு வரும் குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுருவல ஆராச்சிகே உஷான் சதுரங்க விமலவீர என்ற 31 வயதான அவரைக் கைது செய்த போது அவரிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றையும் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

பாதாள உலகக்குழு தந்தை என்றழைக்கப்பட்ட சமயன் என்ற அருண உதயந்த 2017 இல் படுகொலை செய்யப்படும் வரை அவருடன் சதுரங்க விமல வீர செயற்பட்டு வந்தார்.

அதன் பின்னர் அவர் மற்றொரு பிரபல பாதாள உலகக் குற்றவாளியான "உரு ஜூவா" என அழைக்கப்படும் தினேத் மெலன் மாப்புலவுடன் இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)


## சொர்க்கம் திருமண சேவை

1. 1984ஆம் ஆண்டு லண்டனில் வசிக்கும் உத்தராடம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணிற்கு IT படித்த மணமகன் இலங்கையில் தேவை.

2. 1991ஆம் ஆண்டு லண்டனில் வசிக்கும் அனுச நட்சத்திரத்தில் பிறந்த ஆணிற்கு இலங்கையில் BSC படித்த பெண் தேவை.

3. 1991ஆம் ஆண்டு கனடாவில் வசிக்கும் ரோகினி நட்சத்திர சூரியச் செவ்வாய் மணமகனுக்கு இலங்கையில் மணமகள் தேவை. (12374)

தொடர்புகொள்ள:
சொர்க்கம் திருமண சேவை
கனடா :- 0014166661855, யாழ்ப்பாணம்:- 077 887 6969

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி கலைவாணி மில் லேனில்
மாபிள் பதித்த சகல வசதியும் கொண்ட
வடக்கு வாசல்
வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:
077 082 1010, 077 441 0919 (12372)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (12375)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக் குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)
076 835 1932 / 021 223 2222
வெளிநாட்டு திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242
Laufen, Swiss
Tel: 0041768185443 | 0041615544242 (12370)

## இராஜ மருத்துவம்

வாதம், பாரிசவாதம், குத்துளைவு, கரப்பன், கிரந்தி, சொறி, வீக்கம், நோவு, சளி, தும்மல், பீருசம், நீரிழிவு, கெர்ப்பவாயு, நெஞ்சுக்குத்து, நித்திரையின்மைக்கு சிகிச்சைபெற முழு
• பரம்பரை மருத்துவர்
பயிற்சிக்கு தொடர்பு கொள்ள
பேரறிஞர் Dr.K. பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்
076 274 4488 வல்லை வீதி, சங்கானை. (C-4714)

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotelற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- வரவேற்பறை பணியாளர் **Front Office Staff**
- உணவகப் பணியாளர் **Restaurant Waiter**
- சமையலாளர் **Cook**
- சமையலறை உதவியாளர் **Kitchen Helper**
- யாழ்ப்பாண வகை சமையலாளர் **Jaffna Style Cook**
- சலவையக உதவியாளர் - **Laundry Helper**
- பராமரிப்பு தொழில்நுட்ப உதவியாளர் **Maintenance Technician (Electrician, Plumber & AC Technician)**
- விருந்தினர் விடுதி பராமரிப்பாளர் **House keeping Assistant**

☑ அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
☑ உணவு மற்றும் தங்கிட வசதிகள் செய்து தரப்படும்.

தங்களது சுயவிபரக்கோவையை 12.08.2022க்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு/மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (12371)

தொடர்புகளிற்கு - 021720 0707 / 077 343 8373 | info@tilkohotels.com
Tilko Jaffna City Hotel 70/6, K.K.S Road, Jaffna.

## புளோரன்ஸ் நைற்றிங்கேள் தாதியர் பயிற்சிப் பாடசாலை

புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான
ஓர் அரிய சந்தர்ப்பம்

அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களுடன் கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு வைத்தியசாலைகளின் வேலைவாய்ப்புகள்



- ஒரு வருட பயிற்சிப் பாடநெறி (பகுதிநேரம்)
- வயது :- 17 - 35 வரை
- தகைமை :- O/L ஆறுபாடம் சித்தி
- கடமைநேரம்:- 9.00 am - 3.30 pm
- தொடர்புகளுக்கு:- 077 718 6458

சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி. (மெடிகெயார் Hospital அருகில்)
கே.கே.எஸ்.வீதி மருதனார்மடம். (ஆஞ்சநேயர் கோவில் முன்பாக)
குஞ்சர் கடையடி நெல்லியடி. (மேல்தளம்)

T.V.E.C அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் (12377)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்
கடந்த 08.07.2022 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் யோகதாஸ் அசோக்காந்**

(பிரதி அதிபர் - யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்)

அவர்களின் அந்தியேட்டியும் சபிண்டீகரண நிகழ்வும் இன்று (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்:- குடும்பத்தினர்
"இந்திர பிரஸ்தம்"
அல்வாய். (C-4717)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டகாரர்கள் மீது அடக்குமுறை
# 12 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கடும் கண்டனம்

(கொழும்பு)

**கைதுகள், அச்சுறுத்தல்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் முகாம்கள் மீது ஜூலை 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் உட்பட இலங்கையில் ஆர்ப்பாட்டக்காரர்களிற்கு எதிரான வன் முறைகள் பழிவாங்கும் நடவடிக்கைகளை 12 சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கண்டித் துள்ளன.**

18 ஆம் திகதி பதில் ஜனாதிபதியாக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க அவசரகால சட்டத்தை பிரகடனம் செய்தார்.

கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும் படையினருக்கும் பொலிஸாருக்கும் முழுமையான அதிகாரங்களை வழங்கினார். அவசரகாலச்சட்டம் பாதுகாப்பு தரப்பினரிற்கு மேலும் துணிச்சலை வழங்குகின்றது என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அவசரகால சட்டம் அமைதியான முறையில் உடன்பட மறுப்பவர்களை அச்சுறுத்துவதற்கும் ஒடுக்குமுறைகளை முன்னெடுப்பதற்குமான ஆயுதத்தினை பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்குகின்றது எனவும் தெரிவித்துள்ளன.

அமைதியான ஆர்ப்பாட்டங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களும் குற்றங்களாக்கப்படுகின்றனர். நியாய பூர்வமான அரசியல் வெளிப்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு கருத்துச்சுதந்திரம் தன்னிச்சையாக மறுக்கப்படுகின்றது எனவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. (4)

# சீன கப்பல் விஜயத்தை பிற்போடுமாறு இலங்கை வேண்டுகோள்




(கொழும்பு)

சீன கப்பலின் இலங்கை விஜயத்தின் உண்மையான நோக்கம் குறித்து இலங்கை கேள்வி எழுப்பியதை தொடர்ந்து சீனாவின் யுவாங்வாங் 5 உளவு கப்பலின் வருகையை பிற்போடுமாறு இலங்கை கேட்டுக்கொண்டுள்ளதாக இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

மேலும் ஆலோசனைகளை மேற்கொள்ளும் வரை கப்பலின் பயணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை அதிகாரிகள் சீனாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பான கடிதத்தை பார்த்துள்ளதாக சிஎன் என்-நியுஸ் 18 தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து மேலும் ஆராயப்படும் வரை யுவான் வாங் 5 அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையும் திகதியை பிற்போடுமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளதை காண்பிக்கும் கடிதம் என தெரிவித்து அந்த கடிதத்தை இந்திய ஊடகம் வெளியிட்டுள்ளது. (4)

# 2021 க.பொ.த உ/த
# செயன்முறை பரீட்சையில் தோற்றாத மாணவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் செய்முறை பரீட்சைக்கு தோற்றாத பரீட்சார்த்திகளுக்கு மீண்டும் தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் குறித்த பரீட்சையின் செய்முறை பரீட்சைக்கு முழுமையாக தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு மீண்டும் பரீட்சைக்கு தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பரீட்சையில் தோற்றாத மாணவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களை பரீட்சை சுட்டெண், பெயர், பாடம் தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் 071 815 6717 எனும் வாட்ஸ் அப் இலக்கத்திற்கு அல்லது slexamseo@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்ப முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 10 ஆம் திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (4)

# உணவு நெருக்கடி காரணமாகவே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது
## உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் 2018 ஆம் ஆண்டிலிருந்து போசனை மிக்க உணவின் சராசரி மாதச் செலவு 156 சதவீதம் உயர்ந்துள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சுதந்திரத்திற்குப் பின்னர் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியானது தீவிரமான உணவு நெருக்கடியில் இருந்தே உருவாகியுள்ளதாக உலக உணவுத் திட்டப் பிரதிநிதி அப்துர் ரஹீம் சித்திக் தெரிவித்துள்ளார்.

மிக மோசமான விலை உயர்வு, பயிர் விளைச்சல் குறைதல், உக்ரைன் போர் மற்றும் முக்கிய பொருட்களுக்கு பணம் செலுத்த இலங்கை அரசாங்கத்திடம் நிதி பற்றாக்குறை என்பன உணவு பற்றாக்குறைக்கான காரணங்கள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலங்கைக்கு நன் கொடையாளர்களின் ஆதரவை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவசர தலையீடு இல்லாமல் 22 மில்லியன் மக்கள் தொகைக்கு உணவளிக்கும் திட்டங்கள் இன்னும் முழுமைப் பெறாமலேயே உள்ளன என்றும் சித்திக் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து இந்த நாட்டில் எரிபொருள் இல்லாததால் சுமார் 200,000 கடற்றொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

சிறு விவசாயிகளும் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# யாழ்.போதனா மருத்துவமனை செல்வோருக்கு பணிப்பாளரின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்வற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்ததுடன் பொது மக்களுக்கான ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் தொடர்பாக அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

அந்த வகையில் நோயாளர்களை பார்வையிடுவதற்கு பார்வையாளர் நேரத்தில் இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

நோயாளருடன் விடுதிகளில் உதவிக்காக ஒருவர் மட்டுமே தங்கி நிற்க முடியும்.

மருத்துவமனை வளாகத்துக்குள் போதைப்பொருள் அல்லது மது பாவித்தவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கபடமாட்டார்கள்.

விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களோ அல்லது உதவியாளர்களோ இரவு 7.30 மணிக்கு பின்னர் மருத்துவமனையை விட்டு வெளியேற அனுமதிக்கபட மாட்டார்கள்.

விடுதிகளில் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் தங்கள் கடமைகளில் ஈடுபடும் போது உதவியாளர்கள் விடுதியை விட்டு வெளியேறி அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மருத்துவமனைக்குள் வருபவர்கள் மருத்துவமனை சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

நோயாளரை பார்வையிடுவதற்கு குழுக்களாக வருகை தருபவர்கள் எக்காரணம் கொண்டும் விடுதிகளுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.



மருத்துவமனையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்வதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க [illegible] (4-8-33)

# கம்பஹாவில் இளைஞன் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கம்பஹா கெஹல்பத்தர பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை காலை இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 22 வயது இளைஞன் உயிரிழந்துள்ளார் என கம்பஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இருப்பினும் இந்த துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம்இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# 7 பில்.டொலர் நட்டத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

(கொழும்பு)

எரிபொருளுக்கான செலவுக்கு மேலதிகமாக மாதாந்தம் ஏழு பில்லியன் டொலர் நட்டத்தை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் சந்திக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விமானத்திற்கான எரிபொருளை வழங்காததாலும், அந்த எரிபொருளை இந்தியாவிடமிருந்து பெற வேண்டியமையினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா செல்லும் விமானக் குழுவினருக்கு தங்குமிடம் மற்றும் இதர வசதிகள் செய்தல், விமானம் தரையிறக்கல் மற்றும் புறப்பாட்டுக்காகவும் செலவு ஏற்படுகின்றது.

ஒரு மாதத்திற்கு 25 முதல் 30 விமானங்கள் இந்தியாவிற்கு செல்வதாகவும் ஒரு நாளைக்கு ஐந்தரை லட்சம் லீற்றர் எரிபொருள் தேவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022

# தினா, செந்தூரனின் இணைப்பாட்ட சாதனையுடன் நியூஸ்ரார் அணி B பிரிவில் 2ஆம் இடம்

இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 23 ஆவது தகுதி காண் போட்டியில் யாழ். சென்றல் அணி இணைப்பாட்ட சாதனையுடன் நியூஸ்ரார் அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று பிரிவு 'B' யில் 2 ஆம் இடத்தை (RUNNERS) கைப்பற்றியுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸ்ரார் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.

தூயவன்-42, பிரசாத்-16, மோகன்-30, ராசேந்திரம்-22, டன்ஸ்ரன் ஆட்டமிழக்காது 86 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.சென்றல் அணி சார்பாக சலிஸ்ரன் 10 ஓவர்களில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சுபாதீஸ் 9 ஓவர்களில் 43 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கரி, மதுஸன், செந்தூரன் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.



230 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.சென்றல் அணி 36.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையும் 230 ஓட்டங்களையும் பெற்றது.

4 ஆவது இலக்கை இழக்கும் போது 42 ஓட்டங்கள் 5 ஆவது இலக்கு 226 இல் இழந்துள்ளது.

தினா, செந்தூரனின் 184 ஓட்டங்கள் கொண்ட இணைப்பாட்டமே வெற்றிக்கு வழிவகுத்தது.

தினா 124 ஆட்டமிழக்கவில்லை, செந்தூரன் 56 ஓட்டங்கள் பந்துவீச்சில் நியூஸ்ரார் அணி சார்பாக பிரசாத் 5 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் நிலக்ஸன் 4.5 ஓவர்களில் 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு யாழ். சென்றல் அணி 8.60 புள்ளிகளையும் நியூஸ்ரார் அணி 2.79 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

## பவள விழாக் காணும் பண்பாட்டின் ஆளுமை வீணை மைந்தன் சண்முகராஜா



எங்கள்பண்பாட்டின்அழகிய ஆளுமையாக விளங்கும் வீணை மைந்தனுக்கு அகவை 75 வாழ்த்தினைத் தரும் இந்தத் தருணம் அர்த்தம் நிறைந்தது அளவிலா மகிழ்ச்சி தருவது.

அனுபவம் என்ற பல்கலைக்கழகத்தில் நிறையவே கற்றுக்கொண்ட வீணை மைந்தன் சண்முகராஜாவின் அயராத தேடல் மகத்துவமானது. தமிழர் இன வரையியல், அரசியல், கலைகள் என அனைத்து பொருண்மைகளினூடாகவும் அவரது பயணம் அழகாய் அமைந்துள்ளது. எந்தையும் தாயும் இருந்து குலாவிய எங்கள் வலிவடக்கின் மைந்தர்களாய் பள்ளிப்பருவ முதலாகவே அண்மையிலும் சேய்மையிலும் அவர் ஆளுமையின்படி மலர்ச்சியை நயந்து வந்திருக்கிறேன். முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பேற்றுமப் பெற்றியனாக "கணந்தோறும் தன்னைப் புதுப்பிக்கும், இடையறாத அவரது செயல்வீரம் எமக்கெலாம் முன்மாதிரியானது.

வெறும் வாய்ச்சொல் வீரராக இல்லாமல் தாம் வகுத்துக்கொண்ட இலக்குகளுக்கு வாழ்வு தரும் வண்ணமாக இளமைப்பருவ முதலாகவே சமூகப்பயனான அமைப்புகளைத் தோற்றுவித்து கலை - இலக்கிய சமுதாய மேம்பாட்டுப் பணிகளை ஆற்றி வருபவர் வீணை மைந்தன். உலக மயமாக அலைகளிடை சுயம் இழக்கும் அவலங்களிடையும் புலம்பெயர் வாழ்விலும் சுயம் காக்கும் - மீட்கும் ஆளுமையாக அவரது பணிகள் விரிகின்றன. அவர் மேன்மைகள் யாவிலும் ஆதார சுருதியாக, சுய நிமிர்வின் அடையாளமாக இலங்கை வேந்தன் இராவணன் வீணை இரண்டறக் கலந்துள்ளது.

இளமையில் கொடிதான வறுமை, கடிதான இடம்பெயர், புலம்பெயர் அவலங்களையெல்லாம் தாண்டி நிமிர்ந்த பண்பாட்டு மேன்மைக்கான செம்மையான அவர் வாழ்வின் உண்மை அழகைக் கொண்டாடும், வீணை மைந்தன் - 75 பவள விழா இதழை வெளியிடுவதில் யாழ். இலக்கிய வட்டம் பெருமிதம் கொள்கின்றது.

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**
**தலைவர், யாழ். இலக்கிய வட்டம்,**
**முன்னாள் துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ்

# பிறீமியர் லீக் தொடர்

## இறுதியாட்டம் இன்று



கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் தொடர் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் விளையாட்டுக்கழகத் தலைவர் செ. லோகராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது யங் கம்பன்ஸ் அணியை எதிர்த்து வல்வை பிரண்ட்ஸ் அணி மோதவுள்ளது. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, சீனாவின் நலன்களுக்கு பாதகமாக இலங்கை செயற்படாது

## அமைச்சர் பந்துல



(கொழும்பு)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா அல்லது சீனாவின் நலன்களுக்கு பாதகமாக இலங்கை செயற்படாது என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சீனாவும் இந்தியாவும் இலங்கையின் நண்பர்களாக செயற்படுகின்றன.

அதேநேரம் இலங்கையுடன் இந்த இரண்டு நாடுகளும் இணைந்து செயற்படுகின்றன.

இந்த நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் நிறுத்தப்படவுள்ள சீன ஆராய்ச்சிக் கப்பலான யுவான் வாங் 5 இன் நோக்கம் எரிபொருள் நிரப்புதல் மட்டுமே.

கப்பலோ அல்லது அதன் பணியாளர்களோ இலங்கையில் எந்தவொரு உள் விவகாரங்களிலும் அல்லது வேறு விடயத்திலும் ஈடுபடப் போவதில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

யுவான் வாங் 5 என்ற ஆராய்ச்சிக் கப்பல் அம்பாந்தோட்டை நோக்கிச் செல்வதன் மூலம் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இரு நாடுகளுக்கும் இராஜதந்திர மட்டத்தில் விளக்கமளித்துள்ளதாகவும் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (4)

# பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்ய குழு

(கொழும்பு)

பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகம் செய்வதற்குமான குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பதிவில் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார். குறித்த குழு நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4)





யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த அச்சகமான கரிகணன் பிறிண்டேர்சின் முகாமைத்துவப் பணிப்பாளர்

**சிவஞானசுந்தரம் ராஜ்குமார்**

(ராஜ்)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வாணி ரெக்ஸ்,
81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
S.மணிவர்ணன் குடும்பம்,
நல்லூர்.

(C-4715)


# சர்வகட்சிக்கு ஒத்துழைப்பு அமைச்சுப் பதவிகள் வேண்டாம்

## ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

"சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினாலும், அமைச்சுப் பதவிகளைப் பெற்றுகொள்ள மாட்டோம்" என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் டலஸ் ஆதரவு அணி உறுப்பினர்கள் கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன் போதே "மொட்டு" க்கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியான பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

"மக்கள் நலன்சார்ந்து அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவிகளை ஏற்பதற்குத் தயாரில்லை" என்றும் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார். (4)

# இராசிபலன்

07.08.2022
ஆடி 22, ஞாயிற்றுக்கிழமை
தசமி முன்னிரவு 7.54 மணிவரை

அனுசம் பிற்பகல் 1.25 மணிவரை
சுப நேரம் -9.04-10.34 மணிவரை
இராகு காலம் -4.34-6.04 மணிவரை

சந்திராஷ்டமம்-
அச்சுவினி , பரணி

வளவன்

**மேஷம்** வார்த்தைகளில் நிதானம் தேவை, எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உறவினர் பகை மாறும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**துலாம்** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள், புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், இலாபகரமான நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்,

**சிம்மம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், ஆன்மீகப் பணியில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்** கனவு பலிதமுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடை பெறும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம்.

**தனுசு** வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், தேகநலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடலாம், உடல் நலனில் முன்னேற்றம் காணும் நாள்.

உன் உள்ளத்தைச் சீர்படுத்த உன் உணர்வுகளைச் சீர்படுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் தீர்வை வலியுறுத்தி நாவற்குழியில் நேற்று போராட்டம்

(சாவகச்சேரி)

**இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வினை வலியுறுத்தி நேற்று சனிக்கிழமை நாவற்குழிப் பிரதேசத்தில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**




வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு என்ற அமைப்பின் ஏற்பாட்டில் 100 நாட்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சனிக்கிழமை 6 ஆவது நாளாக தென்மராட்சியின் நாவற்குழிப் பிரதேசத்தில் பொதுமக்கள், கிராம அடிப்படை அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட கிராம மட்ட அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்தில் பங்குபற்றிய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் "நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம். வடக்கு-கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஓர் ஜனநாயக உரிமையாகும்" உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (4-30)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினால் செல்வன் த.அபிநாத்தின் "தற்காலிக முகவரியும் நிரந்தர முகவரியும்" நூல் வெளியீட்டு நிகழ்வானது கடந்த 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அதிபர் இ.செந்தில்மாறன் தலைமையில் இடம்பெற்றது. இந்நூல் வெளியீட்டிற்கான சிறப்புரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன், வெளியீட்டுரையை ஆசிரியர் ந.குகபரன், ஆய்வுரையை, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான தி.செல்வமனோகரன் இ.இராஜேஸ்கண்ணா ஆகியோர் வழங்கியிருந்தனர்.

# வீணை மைந்தனுக்கு இன்று பவள விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை பழைய மாணவரும், கனடா தமிழ் எழுத்தாளும் இணைய் நிறுவுநருமான நாடறிந்த கலை இலக்கியப் படைப்பாளி வீணை மைந்தன் கே.ரி.சண்முகராஜாவின் பவள விழா இன்று 7 ஆம் திதகி ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்படத்தில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தன் பேராசிரியர் கலாநிதி.என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதன்போது வீணை மைந்தன் -75 பவளவிழா மலர் வெளியீடும் விழா நாயகன் கௌரவிப்பும் இடம்பெறும். (4)

## நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு

# சிறப்புத் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாடு மற்றும் அனுசரணையோடும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையோடும் முன்னெடுக்கப்பட்டுவரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு, நல்லைக் கந்தன் உற்சவப் பெருவிழாக் காலத்தினை முன்னிட்டு, சிறப்பு நிகழ்வுகள் பலவற்றைக் கொண்டதாக அரங்கேறவுள்ளது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டு" எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவ்வாண்டிலே நாவலர் பெருமான் பற்றிய சொற்பொழிவு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள், இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் எனப் பலதரப்பட்ட நிகழ்வுகள் கல்விமான்களின் தலைமையில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வாக அரங்கேறவுள்ளன.

இத் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு உற்சவ காலங்களில் மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இப்பயனுள்ள நிகழ்வில் அனைவரும் பங்குபற்றிப் பயன்பெறுமாறும் விழா ஏற்பாட்டுக் குழுவினர் அழைத்து நிற்கின்றனர். (4)

## மூலப் பொருட்களின் விலை குறைந்தால்

# பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை குறைக்க முடியும்

### யாழ்.மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கம்

(அராலி)

வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் மூலப்பொருட்களின் விலை குறைக்கப்படுமாக இருந்தால் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைக்க முடியும் என யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் க.குணரட்ணம் தெரிவித்தார்.

வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையினை நாங்களாக அதிகரிக்கவில்லை. மூலப்பொருட்களின் விலை உயர்வின் காரணமாகவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாகவுமே வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையினை அதிகரிக்க நேரிட்டது.

தற்போது கூட மூலப்பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு எரிபொருள் சீராக கிடைக்கப்பெறுமாக இருந்தால் எமது பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலையினை குறைப்பதற்கு தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்தார். (4-104)





நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் தரம் 5 (2021) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான கௌரவிப்பு கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது க.பொ.த. (உ/த) 1991 பிரிவின் இராணிதேனீக்கள் அணியினரால் மறுசீரமைக்கப்பட்ட தரம் 5 இற்கான மாதிரி வகுப்பறையும் திறந்து வைக்கப்பட்டதுடன் கல்லூரி பாண்ட் வாத்தியக் குழுவினருக்கான புதிய சீருடை அன்பளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. கனடாவில் வசிக்கும் பழைய மாணவன் ஜெயகாந்தன் பாலசிங்கம் மேற்படி சீருடை அன்பளிப்பை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா

ஒரு திரைப்படத்தில் பல பேர் இருக்கும் சபையில் கவுண்டமணி தொலைபேசியில் பேசுவார்.


மிகவும் சத்தமாக பேசுவதுடன் அப்பேச்சில் அவர் ஒரு மிகப் பெரிய அரசியல் பிரமுகரிடம் பேசுவதாய் காட்டிக்கொள்வார். அதிலும் அந்த பெரும் அரசியல் பிரமுகர் தன்னிடம் உதவி கேட்பது போலவும் அதைத் தான் சாதாரணமாக செய்து முடிப்பதாயும் கவுண்ட மணி பேசி முடிப்பார்.

அங்கிருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் கவுண்டமணியைப் பார்க்க அங்கிருந்த ஒருவர் ஒரு அறுந்த வயரை கையில் எடுத்து காட்டியபடி தொலைபேசி வயர் அறுந்து ஒரு வாரம் ஆகிவிட்டது என்பார்.

அதற்கு கொஞ்சமும் பதட்டம் அடையாத கவுண்டமணி "அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா" என்று கூறுவார்.

இது வெறும் நகைச்சுவை என்றாலும் அந்த வசனம் இற்றைவரை நிலைத்திருக்க அரசியலின் முடிச்சவிக்கித்தனமே காரணமாகிறது.

"அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா" இது போன்ற



ஒரு செயல் அண்மையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையேயான சந்திப்பில் நடைபெற்றது.

ஆம், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும் அது மக்கள் மத்தியில் எதிர்ப்பினை ஏற்படுத்தும் விடயமாகவே காணப்படுகிறது.

ஏனெனில், ராஜபக்ஷக்களின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் இருந்த அத்தனை பேரும் தற்போது ரணிலை ஆதரிக்கின்றனர் எனின் நடப்பது ரணில் ஆட்சியா? ராஜபக்ஷக்களின் ஆட்சியா? என்பது மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி.

இதைவிட ராஜபக்ஷக்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்தியவர்களை தேடித்தேடி வேட்டையாடுதலும் இந்த சந்தேகத்தை மேலும் வலுப்பெற வைத்துள்ளது.

நிலை இவ்வாறு இருக்கையில் எப்பாடுபட்டாவது சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவி விட வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகத் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அந்த நடவடிக்கைகளுக்காக பல்வேறு கட்சிகளையும் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றார்.

சர்வகட்சி அரசில் இணைய மாட்டடோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார [illegible] அறிவித்திருக்கும் நிலையில்

கடந்த புதன்கிழமை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொள்ளாத குறித்த சந்திப்பில் தமிழ்த்தேசிய

> "தமிழ் மக்கள் நன்மை கருதி உங்களில் சிலர் எனக்கு வாக்களித்தீர்கள்-ரணில்
> இல்லை எங்களில் எவரும் உங்களுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை-கூட்டமைப்பு"

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கொ.கருணாகரம், வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன் ஆகியோர் குறித்த கலந்துரையாடலில் பங்கு கொண்டு இருந்தார்கள்.

குறித்த சந்திப்பில்; அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணை, தமிழ்ப் பிரதேசங்களில் காணி அபகரிப்பை நிறுத்துதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்த கூட்டமைப்பினர் இவற்றை செயற்படுத்தினால் சர்வகட்சி அரசியலில் இணைய ஆலோசிக்கப்படும் என தெரிவித்திருந்தனர்.

கலந்துரையாடலின் ஒரு கட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் நடந்த ஜனாதிபதி தெரி[illegible] கூட்டமைப்பினர் சிலர் எனக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பது எனக்குத் தெரியும் எனக் கூறியிருந்தார்.

இதை சற்றும் எதிர்பாராத கூட்டமைப்பினர் ஜனாதிபதியின் கூற்றை மறுத்து; அல்ல, கூட்டமைப்பினர் கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்பட வில்லை.

அவர்கள் ஒருமித்து தங்களுக்கு (ரணிலுக்கு) எதிராகவே வாக்களித் தார்கள் என கூறினர். அதனை மறுத்த ஜனாதிபதி கூட்டமை ப்பினர் எனக்கு வாக்களித் தார்கள் என்பதை நான் அறிவேன் எனத் திடமாகக் கூறினார்.

ஒருவாறு அந்த விடயம் சமாளிக்கப்பட்டு அந்த விடயத்திலிருந்து வேறு விடயத்திற்கு செல்வதற்கு கூட்டமைப்பினர் பெரும் பிரயத்தனம் செய்தனர் என்பது மீதிக்கதை.

எதுவாயினும் கூட்டமைப்பினர் தனக்கு ஆதரவாக வாக்களித்தார்கள் என ரணில் கூற, இல்லை இல்லை நாங்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லை என கூட்டமைப்பினர் அதை மறுத்துக் கூற, அடடா இதுவல்லவா அரசியல் சாணக்கியம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பில் சிலர் தனக்கு ஆதரவாக வாக்களித்தனர் என ஆணித்தரமாக கூறுகிறார் எனில், இதில் ஏதோ சிக்கல் இருப்பது நன்கு புரிகிறது. இந்தச் சந்திப்பில் நடந்த இந்த சுவாரசியமான விடயத்தினைப் பார்க்கும் போது திரைப்படத்தில் கவுண்டமணி கூறிய "அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா" என்ற சமாளிப்பே முன்வந்து நிற்கிறது. சிரிப்பும் குப்பென்று வந்து விடுகிறது.

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## சர்வதேசப் பாடசாலைகளின் அறுவடை வரத் தொடங்கிற்று...

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடிமாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

விதானையார் சோகத்துடன் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த மூப்பர் என்ன? விதானையார் ஒரு மாதிரியாய் இருக்கிறியள், ஏதேனும் உடல் நலக் குறைவோ

விதானையார்: எனக்கொரு உடல் நலக் குறைவும் இல்லை. ஆனால் எங்கட வட புலத்தில அடாவடித்தனக் குழுவொன்று உருவாகிற்று.

அதை நினைக்கத்தான் கவலையாய் இருக்குது. இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடியில் இருந்தவர்கள் அனைவரும் விதானையாரை நோக்கினர்.

என்ன விதானையார் சொல்லுறியள் மூப்பர் அவசரமாகக் கேட்டார்.

விதானையார்: எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் வரிசைகளில குழப்பத்தை ஏற்படுத்துகிறவர்கள் ஒரு பெரும் ஹாங்காக இயங்குகினமாம்.

அப்பாவி மக்களை வெருட்டுவதும் சண்டித்தனம் காட்டுவதும் அவர்களின் ஆகக் குறைந்தபட்ச அடாவடித்தனமாக இருக்குது. இவற்றுக்குப் பின்னால் பொலிஸாரும் இருப்பதாகக் கேள்வி.

கங்காணி: பெற்றோல் ஒழுங்காகக் கிடைக்குமாக இருந்தால், இந்த மாப்பியாக்களின்ர கதையும் முடிந்து போகும் தானே.

விதானையார்: இது தான் எங்கட தவறான கணிப்பு. பெற்றோல் தாராளமாகக் கிடைக்கும் போது, இந்த மாபியாக்கள் ஆட்கடத்தல், கூலிக்கு கொலை செய்தல், கொள்ளை ஆகிய காரியங்களில் ஈடுபடுவினம்.

அப்பதான் அவர்களின்ர உச்சகட்ட கோர தாண்டவம் தலைவிரித்தாடும்.

சாத்திரியார்: அப்ப விதானையார் இதுக்கு என்னதான் செய்யிறது.

விதானையார்: வட பகுதியில உள்ள பொலிஸார் இவற்றைக் கட்டுப்படுத்தவில்லையெண்டு சொல்லி பொதுஅமைப்புக்கள் ஒன்று சேர்ந்து பொலிஸ்மா அதிபருக்கு முறையீடு செய்ய வேணும்.

பெற்றோல் மாபியாக்களோட தொடர்புடைய பொலிஸாரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேணும். வடபகுதியில் பொலிஸ் சேவையைத் தூய்மையானதாக ஆக்க வேணும்.

சிறாப்பர்: அது சரி எங்கட தமிழ்ப் பொலிஸாரின்ர நடவடிக்கைகள் எப்படி இருக்குது.

மூப்பர்: இனப்பிரச்சினைக்கான தீர்வில பொலிஸ் அதிகாரம் வேணும் என்பது எங்கட கோரிக்கையாக இருக்குது.

ஆனால் எங்கட தமிழ்ப் பொலிஸாரின்ர போக்கைப் பார்க்கும் போது, பொலிஸ் அதிகாரத்தை எடுத்து தமிழ் ஆட்களை பொலிஸாக நியமித்து ஏதேனும் செய்ய முடியுமோ எண்டுதான் எண்ணத்தோன்றுது.

சாத்திரியார்: ஏன் மூப்பர் அப்படிச் சொல்லுறியள்?

மூப்பர்: பின்ன, தமிழ்ப் பொலிஸார் தற்துணிவோட செயற்படுவதாக இல்லை.

மாறாக, தங்கட தராதரத்தில இருக்கிற சிங்களப் பொலிஸாரிட்ட கேட்டுத்தான் எதையும் செய்யிறவர்களாக இருக்கினம்.

உண்மையில தமிழ்ப் பொலிஸ் நினைத்தால், பெற்றோல் மாபியாக்களை ஒரு கணப்பொழுதில கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டுவர முடியும். ஆனால் பெற்றோல் மாபியாக்களுக்குத் தமிழ்ப் பொலிஸார் பயப்படுவது போலதான் நிலைமை இருக்குது.

பண்டிதர்: பெற்றோல் மாபியாக்களுக்கு சிங்களப் பொலிஸார் சப்போட் பண்ணினால், தமிழ்ப் பொலிஸார் பயப்படத் தானே வேணும்.

மூப்பர்: ஏன்! பண்டிதர் ஐயா! பொலிஸ் முறைகேடு தொடர்பில உரிய இடங்களுக்குத் தகவல் கொடுப்பதையாவது இந்தத் தமிழ்ப் பொலிஸார் செய்யலாம் தானே!

வாத்தியார்: ஓ! இப்ப எங்கட தமிழ்ச் சமூகம் எதிர்மறையாகத் தான் முன்னேறிச் செல்லுது.

கங்காணி: என்ன வாத்தியார் சொல்லுறியள்?

வாத்தியார்: மானிப்பாயில் உள்ள சர்வதேசப் பாடசாலை மாணவி ஒருவர், பாடசாலை நிர்வாகத்தால தனக்கு மனப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகப் பத்திரிகையாளர் சந்திப்பொன்றைக் கூட்டி கூறியிருக்கின்றார்.

அதில் ஓர் ஆசிரியையின் பெயரைக் குறிப்பிட்டுக் கூறி, அந்த ஆசிரியரின்ற நடவடிக்கை பிழை என்று கூறுமளவில நிலைமை வந்துட்டுது எனும் போது, எப்படி எங்கட பிள்ளைகளின்ர எதிர்காலம் இருக்கப் போகின்றது என்பதை ஒருக்கால் நினைத்துப் பாருங்களன்.

விதானையார்: என்ன வாத்தியார் சொல்லுறியள். ஒரு மாணவி பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி ஆசிரியரின்ர பெயரைக் கூறி அந்த ஆசிரியருக்குக் களங்கம் ஏற்படுத்தினவரோ! இந்தச் சந்திப்புக்குப் பத்திரிகையாளர்களும் போனவியளோ?

வாத்தியார்: இப்ப விதானையார் காசு இருந்தால் எதுவும் செய்யலாம். யாருக்கும் களங்கம் கற்பிக்கலாம் எண்ட நிலைமை வந்திட்டுது.

விதானையார்: என்னவா இருந்தாலும் பத்திரிகையாளர் சந்திப்புக்களை நலினப்படுத்தாமல் இருக்கிறதை ஊடக அமைப்புக்கள் கவனித்துக் கொள்ள வேணும்.

பாதிக்கப்பட்ட ஒரு மாணவியிட்டப் போய் பத்திரிகையாளர்கள் பேட்டி எடுக்கிறதும் சம்பந்தப்பட்ட மாணவி பத்திரிகையாளர் சந்திப்பை நடத்துறதும் வித்தியாசமான விடயங்கள். இதில் ஊடக அமைப்புக்கள் மிகத் தெளிவாக இருக்காவிட்டால், அதின்ர விளைவு பாரதூரமானதாகத்தான் இருக்கும்.

வாத்தியார்: சர்வதேசப் பாடசாலைகள் எண்டு அமைத்துக் கடைசியாகக் கண்டது என்ன?

எங்கட பாடசாலைக் கட்டமைப்புக்கள், பிரார்த்தனைகள், தமிழ்த்தின விழாக்கள், சமய நிகழ்வுகள், பண்டிகைகள் என்ர பண்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற எங்கட பாடசாலைக் கட்டமைப்புக்குள்ளால வந்த மாணவர்கள் ஒரு போதும் தங்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்குக் களங்கம் ஏற்படுத்த மாட்டினம்.

ஆனால் சர்வதேசப் பாடசாலை என்பதை எண்டைக்குக் கொண்டு வந்து; தமிழையும் அழித்து சைவத்தையும் சிதைத்து; கடைசியில தங்கட பெயர்களையும் கெடுத்துக் கொண்டது தான் மிச்சம்.

கங்காணி: உண்மை தான். சர்வதேசப் பாடசாலைகளின் விளைவை இனித்தான் அந்தப் பாடசாலை நிர்வாகங்கள் அறுவடை செய்யப் போகினம். அப்பதான் எல்லாம் தெரியவரும்.

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூறியதும் அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சின்னத்திரை நெடுந்தொடரினால் பாதிக்கப்படுவது ஆண்களா? பெண்களா?






தமிழினத்தின் பிரச்சினையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்த்து வைப்பாரா வியாசரே?

**சிவம் — வதிரி**

**அன்புக்கு அடிமையானவர்களை அதிகாரம் செய்வது எப்பேற்பட்டது வியாசரே?**

இந்த சமூகம் இதற்கு இசைவாக்கம் அடைந்து விட்டது என்பது தான் உண்மை.
ஒருவர் எம்மில் வைத்திருக்கும் அன்பை துஸ்பிரயோகம் செய்வது ஒரு நாளும் நல்ல தல்ல.
ஒருவர் நம்மில் அன்பு வைத்திருக்கிறார் என்பதற்காக அவர் எம்முடன் மட்டும் தான் அன்பாய் இருக்க வேண்டும் என நினைப்பது முட்டாள் தனமானது.
இந்த வியாதி இப்போது பலரிடம் இருக்கவே செய்கிறது.

**ராஜ்மாலா — வடலியடைப்பு**

**வியாசரே வீரத்திற்கும் விவேகத்திற்கும் வித்தியாசம் கூறுங்களேன்.**

ஒருவன் பெரிய கம்பி ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து எம்மை தாக்குகின்றான்.
எதிரி தனது முழுப்பலத்தையும் செலுத்தி அந்த கம்பியை எம்மில் வீசுகிறான்.
அந்தக் கம்பியை எமது கையினால் பிடித்து எம்மில் விழும் அடியை கையால் தடுத்து நிறுத்துவது வீரம்.
அதுவே அவன் வீசும் கம்பியில் படாமல் லாவகமாக விலகிக் கொள்வது விவேகம்.
வீரம் சில இடங்களில் சறுக்கலாம் விவேகம் ஒரு நாளும் சறுகாது.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**நாதன் — இணுவில்**

**பெற்றோலுக்கான வரிசை பல சண்டைகளுக்கு வளிவகுக்கின்றதே வியாசரே?**

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக வரிசையில் நின்ற பல சாதுக்கள் மிரண்டதை நான் கண்டேன்.
அட இந்த அப்பாவியா இப்படி நடந்து கொள்கிறான்.
இந்தப் பேசா மடந்தையா இவ்வளவு கெட்ட வார்த்தைகளைக் கொட்டுகிறான் என்று வியப்பு ஒரு பக்கம் எழுந்தாலும் இரண்டு லீற்றர் பெற்றோலுக்காக காத்திருக்கும் ஒருவனின் நடத்தை எவ்வாறு மாற்றம் பெறுகிறது என்பதை நினைக்கும் போது, சிவசிவா இந்த வருடம் முழுவதும் இவ்வாறே தொடரும் என்ற அறிவிப்பு.
நடப்பவை அனைத்தும் நன்மைக்கே என்ற ஒற்றை வார்த்தையை நம்பியபடி எனது மோட்டார் சைக்கிளை நகர்த்தினேன். மெதுவாக...

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தமிழினத்தின் பிரச்சினையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்த்து வைப்பாரா வியாசரே?**

ஈழத்து சிறுவர் நாடகத்தின் தந்தை என போற்றப்படுகின்ற குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் மண் சுமந்த மேனியர் நாடகத்தில் வரும் வசனம் ஒன்று இப்போது நினைவில் வந்தது.
''மேற்காலை வெளிக்கும் என்று தலையைச் சொறிஞ்சு கொண்டு இருங்கோடா'' என்பதே அந்த வசனம்.
உங்கள் கேள்வியை பார்த்ததும் எனக்கும் அந்த நாடக வசனமே நினைவில் வந்தது, மேற்கில் ஒரு நாளும் வெளிக்காது. அதை நினைவில் வைத்திருப்பது மிக்க நன்று.
இந்த தீர்க்க தரிசன வசனத்தை 80 களில் எழுதிய குழந்தை சண்முகலிங்கத்தின் மாணவன் என்பதில் எனக்கு பெருமையே.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுதன் — குப்பிழான்**

**கூட்டமைப்பை நல்லாட்சி அரசு ஏமாத்தியது போல சர்வகட்சி அரசும் ஏமாற்றுமா வியாசரே?**

ஜீ தமிழ் தொலைக்காட்சியில் தமிழா தமிழா நிகழ்ச்சிக்கு வந்த ஒருவர் தன்னை இதுவரை ஐந்து பெண்கள் காதலித்து ஏமாற்றிவிட்டதாக அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்ததுடன் முதல் பெண் ஏமாற்றிய போது மிகவும் கஸ்டப்பட்டு தற்கொலை செய்ய முயற்சித்ததாகவும் காலப் போக்கில் அது பழகி இப்போது யார் ஏமாற்றினாலும் அது பெரிதாக வலிப்பதில்லை என்றும் கூறினார்.
கூட்டமைப்பை ஏமாற்றாதவர்கள் யாரும் உண்டா என்ன? அவர்களுக்கு இப்போது ஏமாற்றம் பழகிவிட்டது. அவர்களிடம் இதுபற்றிக் கேட்டால் யூயுபி என்பார்கள்.

**கலீபா அப்துல் கமீத் — யாழ்ப்பாணம்**

**ஐயா வியாசரே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சர்வகட்சி அரசியலில் இணைவது தமிழர் விடுதலைக்கு சாதகமாகுமா?**

யார் தலைகீழாய் நின்றாலும் தமிழர் பிரச்சினை தீரப்போவது இல்லை.
ஆனால் ஒன்று, கூட்டமைப்பு சர்வகட்சி அரசில் இணைந்தால் அவர்களில் ஒருவருக்கு மிகப் பெரிய அமைச்சுப் பதவி ஒன்று காத்திருக்கிறது என்பதே உண்மையானது.
இதனால் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்பவருக்கு நன்மையே தவிர அதனால் தமிழினத்துக்கு சல்லிப்பிரயோகம் இருக்காது.
இதைப் புரிந்து கொள்ளாது அமைச்சுப்பதவியை எடுத்தே தீருவோம் என்று அடம்பிடித்தால் நாம் என்னத்தை செய்துவிட முடியும்.

**இதழினி — புலோலி**

**புரிதல் இல்லாத உறவுகளிடம் இருந்து பிரிதல் சிறப்பானதா வியாசரே?**

எம்மைப் புரிந்து கொள்ளாதவர்களிடம் போய் எம்மைப் புரிந்து கொள்ளும்படி கேட்பது முறையல்ல.
அவ்வாறு கேட்போமாக இருந்தால் எம்மைப்போல முட்டாள்கள் வேறு யாருமாக இருக்க முடியாது.
எமது மனம்மனசாட்சிப்படிநடந்துகொண்டால், அது இறைவனுக்கு மாத்திரம் தெரிந்து கொண்டால் போதுமானது.
எம்மை நிரூபிக்க மற்றவர்கள் முன் போய் நிற்கவேண்டிய தேவை எதுவும் இல்லை.
இறைவன் என்ற ஒன்று உண்டு அதுவே நீதி தர வல்லது.

**மதுவன் — மீசாலை**

**சின்னத்திரை நெடுந்தொடரினால் பாதிக்கப்படுவது ஆண்களா? பெண்களா?**

ஒரு செயலைச் செய்யும் போது அனைத்தையும் சரியாகச் செய்தாலும் நாம் விடும் ஒரு சிறிய தவறு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடும்.
தொலைக்காட்சி தொடர்பார்த்தபடி ஒரு பெண் தோசைக்கு மா கரைத்தார்.
உப்பு அளவாகச் சேர்ந்தார். தாழியம் சரியாக இட்டுக்கரைத்தார்.
அடுப்பை மிக நுட்பமாக மூட்டினார். தோசைக் கல்லை அடுப்பில் வைத்து தோசையை ஊற்றி இருபக்கமும் சரியாக பிரட்டி எடுத்து கணவனுக்கும் பரிமாறினார்.
என்ன கொடுமை தோசை கருமையாய் இருந்தது.கணவன் கோபம் கொண்டான்.
தவறு எங்கே நடந்தது தெரியுமா? தோசைக் கல்லு தலைகீழாக அடுப்பில் வைக்கப்பட்டு விட்டது.
இவை அனைத்தும் தொடர் நாடகத்தால் வந்த வினை அவ்வளவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: அவன் தான் மனிதன்**
**இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்**
**இசை: எம்.எஸ். விஸ்வநாதன்**
**பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்**



மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு
பாவம் மனிதனென்று
மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்குமென்று
மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்குமென்று

இறைவன் நினைப்பதுண்டு
பாவம் மனிதனென்று
இறைவன் நினைப்பதுண்டு
பாவம் மனிதனென்று
மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்குமென்று

தந்தை தவறு செய்தார் தாயும்
இடம் கொடுத்தாள்
தந்தை தவறு செய்தார்
தாயும் இடம் கொடுத்தாள்
வந்து பிறந்து விட்டோம் வெறும்
பந்தம் வளர்த்து விட்டோம்
மனது துடிக்கின்றது மயக்கம் வருகின்றது
அழுது லாபம் என்ன
அவன் ஆட்சி நடக்கின்றது

மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்குமென்று

காட்டு மனமிருந்தால் கவலை வளர்ந்து விடும்
காட்டு மனமிருந்தால் கவலை வளர்ந்து விடும்
கூட்டைத் திறந்து விட்டால்
அந்தக் குருவி பறந்து விடும்
காலில் விலங்கு விட்டோம்
கடமை என அழைத்தோம்
நாலு விலங்குகளில் தினம்
நாட்டியம் ஆடுகின்றோம்

மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்குமென்று

விதியின் ரதங்களிலே நாம்
விரைந்து பயணம் செய்தால்
மதியும் மயங்குதடா சிறு
மனமும் கலங்குதடா
கொடுக்க எதுவுமில்லை என்
குழப்பம் முடிந்ததடா
கணக்கை முடித்து விட்டேன்
ஒரு கவலை முடிந்ததடா

மனிதன் நினைப்பதுண்டு
வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு
பாவம் மனிதனென்று

# சீனக் கப்பல் வருகை சிக்கலில் இலங்கை


**இந்தியா தமது தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படும் என கருதும் விடயத்தினை இலங்கை கடற்பரப்பில் இடம்பெறுவதற்கு இட மளிக்குமா? சீனா தமக்கு சொந்தமான அம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயற்பாடுகளுக்கு மற்றுமொரு நாடு அழுத்தம் விடுக்கும்போது மௌனம் காக்குமா?**

சீன ஆய்வுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தரவுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு இந்தியா கொண்டு வந்துள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கப்பல் தொடர்பில் இந்தியா தெளிவான தகவலை வழங்கியிருந்த போதிலும், இலங்கை பாதுகாப்பு அமைச்சு கப்பலின் வருகையை உறுதிப்படுத்தியமையினால் இந்தியா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Yuan Wang 5 கப்பல் சீன இராணுவத்தின் மூலோ பாய ஆதரவுப் படைக்கு சொந்தமான செய்மதிகள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை கண்காணிக்க பயன்படுகிறது.

இந்தியா இதனை சீன உளவு பார்க்கும் கப்பல் என தெரிவித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்த நீர்மூழ்கிக்கப்பலை விட இது



ஆபத்தானது என இந்தியாவின் எக்கனோமிக் ரைம்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. Yuan Wang 5 கப்பல் மூலம் 750 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இடங்களின் தரவுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இதன் மூலம் இந்தியாவின் தெற்கு பிரதேசத்தின் பாதுகாப்பு நிலையங்கள், ஆறு, துறைமுகங்கள் தொடர்பிலான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமென எக்கனோமிக் ரைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் கல்பாக்கம் அணுமின் நிலையம், கூடங்குளம் அணுமின் நிலையம், கொச்சியில் உள்ள தெற்கு கடற்படை [illegible] முக்கிய இடங்களும் இதில் அடங்குகின்றன.

இதன் காரணமாக சீன ஆய்வுக் கப்பலை இந்தியா மிகவும் ஆபத்தானது என்றே கூறுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் இந்தியா அதிக கவனம் செலுத்தியுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

Yuan Wang 5 கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வரவுள்ள விடயம் குறித்து கடந்த வாரம் ஊடங்கள் மூலம் தகவல் வெளியானதும், அதனை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்ததாகவும் பின்னர் எதிர்வரும் 11 ஆம் திகதியில் இருந்து 17 ஆம் திகதி வரை இந்த கப்பலுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருவதற்கு அனுமதி வழங்கியுள்ளமை உறுதியாகியுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதேவேளை, தாய்வானை அடிப்படையாகக் கொண்டு சீனா - அமெரிக்கா இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு வரும் நிலையிலேயே இந்திய - சீன சமுத்திர நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் விஜயத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதியாக சீனா தாய்வானை கருதுவதுடன், அமெரிக்கா தமது எதிர்ப்பையும் கருத்திற்கொள்ளாமல் செயற்பட்டால் ஆபத்துகள் ஏற்படும்என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தாய்வானை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டுள்ள இந்த முரண்பாடு காரணமாக அமெரிக்கா தமது பிரதான மூன்று யுத்த கப்பல்களை தாய்வானின் மேற்கு கடற் பகுதியில் நிறுத்தியுள்ளது.

அத்துடன், சீனாவும் தமது தாக்குதல் கப்பல்களை தென்சீனகடல்எல்லை, அதனை அண்டிய பகுதிகளில் நிலை நிறுத்தியுள்ளதுடன், யுத்தம் ஏற்பட்டால் அதற்கு பதில் வழங்கத யார் எனவும் அறி வித்துள்ளது. தாய்வானை அடிப் படையாகக் கொண்டு இவ்வாறான நெருக்கடி ஏற்பட்டு வரும் நிலையில், அம்பாந் தோட்டை துறைமுகத்திற்கு வருதற்கு தயாராகும் சீன கப்பல் தொடர்பில் இந்திய வெளிவிகார அமைச்சின் பேச்சாளர் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார பாதுகாப்பிற்காக மேற்கொள்ள முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக அவர் கூறியிருந்தார்.

இராஜதந்திர ரீதியில் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் அளவிற்கு இந்தியாவும் சீனாவும் இந்த நெருக்கடி நிலைமையில் நெகிழ்வுடன் செயற்படுமா?

இந்தியா தமது தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படும் என கருதும் விடயத்தினை இலங்கை கடற்பரப்பில் இடம்பெறுவதற்கு இடமளிக்குமா? சீனா தமக்கு சொந்தமான அம்பாந் தோட்டை துறை முகத்தின் செயற்பாடுகளுக்கு மற்றுமொரு நாடு அழுத்தம் விடுக்கும்போது மௌனம் காக்குமா?

தமக்குத்தேவையான வாறு இலங்கை வெளிநாடுகளுடன் செய்துகொண்ட கொடுக்கல் வாங்கல்கள் காரணமாகவே இன்று இந்த பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

தாய்வானைப் போன்று இலங்கையும் பூகோள அரசியல் மோதலில் சிக்காமல் இருப்பதற்கு தற்போதேனும் கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் எடுக்கப்படுமா?

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், இன்னுமொரு நெருக்கடி ஏற்பட்டுள்ளதை நாம் மறந்துவிடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

விருந்தினர் மண்டபத்துக்கு, இன்னும் முழுமையாக ஆட்கள் வரவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டு மூன்று பேர் தங்களது விருந்தினர்களோடு, தனித்தனியாக இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். மண்டபத்தின் முன்னாலும் பின்னாலும் போடப்பட்டிருந்த மேசையிலிருந்து உத்தியோகத்தர்கள் அவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். நடுவிலிருந்த விசாலமான சுவரில் அபொறிஜினல் கோட்டு ஓவியமொன்று அழகாக வீற்றிருந்தது.

மண்டபத்தின் கிழக்குப் பக்கமாக இருந்த அகன்ற பச்சை நிறக்கதிரையில் நீதன் போய் அமர்ந்தான். அதற்கு முன்னாலிருந்த இன்னோர் அகன்ற கதிரையில் ராதா அமர்ந்து கொண்டாள். அருகில் பார்த்தபோது, இன்னும் பல விளக்கமான விடயங்கள் அவளில் தெரிந்தன.

தலைநிறைய பூ வைத்திருந்ததோ அல்லது அவள் பூசியிருக்கும் வாசனைத் திரவியமோ ஏதோ ஒன்று, அகதி முகாமுக்குச் சம்பந்தமே இல்லாத அதி அற்புத நறுமணத்தை நாசியில் அடித்தது.

இடது கன்னத்தில் எப்போதும் துருத்திக் கொண்டிருக்கும் அவளது பருவைக் காணவில்லை. இருந்தாலும் அதிகம் ஒப்பனையிடாத அவளது முகம், அவள் உள்ளத்திலிருந்த மகிழ்ச்சியைத்தான் ஓய்வில்லாமல் பருகியபடியிருந்தது.

"தனியவா வந்தனீ, குழந்தை எங்க?"

தனக்கு அப்பால் தனது குழந்தையை நீதன் தேடுவான் என்பதை நிச்சயமாக ராதா அறிந்திருந்தாள்.

"எங்களுக்குத் தந்திருக்கிற வீட்டுக்குப் பக்கத்தில ஒரு அக்கா இருக்கிறா. இரண்டு பிள்ளையளோட படகில வந்து மூண்டு வருசத்துக்கு முன்னம் வெளியில போனவ. அவவோட விட்டுட்டு வந்தனான்."

"ஓ"

"அவவிண்ட பிள்ளையளோட, இவளும் நல்லா சேந்திட்டாள், விளையாட்டு, படிப்பு எண்டு, எனக்குக் கரைச்சல் குறைவு."

> **ராதாவின் உதடுகளில் தெரிந்த நடுக்கம், தான் முன்னம் கவனிக்காததா அல்லது உண்மையிலே பயத்தோடு பேசுகிறாளா என்பதில் நீதனுக்குக் குழப்பம். இருந்தாலும், இயன்றவரை, அவள் பேசுவதில் கவனம் செலுத்தினான்.**

## வலி சொல்லும் தொடர்... 42

புன்னகையோடு தலையை அசைத்து அவள் சொன்ன, அவளது புது வாழ்க்கைச் சரிதம், அவள் எதிர்பார்த்து வந்த வாழ்க்கை இங்கு கிடைத்து விட்ட பூரிப்பை முகத்தில் பூசிக் காட்டியது.

"எங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருந்து ஒரு குடும்பம், இஞ்ச பக்கத்தில, குன்றத்துக் குமரன் கோயிலுக்குப் போனவயள். அவயளோடு சேர்ந்து வந்தனான். கோயிலால போகும் போது, இதில இறக்கச் சொன்னனான். வீட்டுக்கு பஸ்ஸில போற வழி இப்ப எனக்குத் தெரியும்."

ராதாவுக்கு எப்போது கடவுள் நம்பிக்கையெல்லாம் வந்தது? இயக்கத்திலிருக்கும் போதே இருந்திருக்குமோ என்று ஆதி நினைவுகளை ஒரு கணம், நீதனின் புலனாய்வுப் புத்தி உருட்டிப் பார்த்தது.

"அப்ப, உங்கட பாடுகள் எப்பிடி... அதுக்குப் பிறகு இன்டர்வியூ நடந்ததா... இமிகிரேசன் ஏதாவது சொன்னவயளா?"

வெளிக்கதைகளைக் கேட்கும் போது செவிக்கு இனிமையாக இருந்த அவளது குரல், திடீரென்று முகாம் கதைக்குத் திரும்பியவுடன்தான், தான் முகாமுக்குள் இருக்கும் உணர்வே நீதனுக்குள் மீண்டும் முளைத்தது.

பாதி கடித்த நகத்தை அடுத்த விரலால் தட்டியபடி,

"இமிகிரேசன் என்னத்தச் சொல்லுறது... அதுதான், அவங்கள் கேஸ அப்படியே புலனாய்வுக்காரங்களிட்ட குடுத்திட்டாங்களே." அலுத்துக் கொண்டான் நீதன்.

"அதை விடு, வேற என்ன புதினம் வெளியில?"

ராதாவுக்கு எப்படி ஆரம்பிப்பது என்ற பெரிய பதற்றமும் அதை இலாப நட்டக் கணக்குகளோடு




நீதன் விளங்கிக் கொள்ளக்கூடாது. அதேவேளை, விளங்கிக்கொள்ளவும் வேணும் என்ற தேவையும் கண்களில் படபடத்தது.

பழசுகள் எல்லாவற்றையும் வலுக்கட்டாயமாக அடிமனதில் புதைத்தாள். நீதனையும் கூட இப்போதுள்ளவனாக மாத்திரமே நினைத்தாள்.

பெரும் தைரியத்தோடு பேசத் தொடங்கினாள்.

"என்ர கேஸ் செய்யிற லோயரோட இரண்டு மூண்டு தடவைகள் அப்பொயின்மென்ற் எடுத்து கதைச்சனான். அவரும் தன்ர சீனியரில் பாறிஸ்டர் ஒருத்தரோட கூட்டிக் கொண்டுபோய் கதைச்சவர்."

ராதாவின் உதடுகளில் தெரிந்த நடுக்கம், தான் முன்னம் கவனிக்காததா அல்லது உண்மையிலே பயத்தோடு பேசுகிறாளா என்பதில் நீதனுக்குக் குழப்பம். இருந்தாலும், இயன்றவரை, அவள் பேசுவதில் கவனம் செலுத்தினான். "என்ர கேஸ் தன்ர பாட்டில சரிவருமாம், நான் உங்கட நிலைமையைத்தான் சொல்லி கேட்டனான்."

கிழிந்த நகத்தைத் தட்டிக் கொண்டிருந்த நீதனின் விரல் தானாவே அதிர்ந்து நின்றது.

"உங்கட கேஸ் நிலைமை கொஞ்சம் கஸ்டமதானாம். கொஞ்ச காலத்துக்கு முதல்தான் இவங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தவங்கள் எண்டபடியால, இந்தச் சட்டத்தை சட்டத்தால உடைச்சுக்கொண்டு, விடுதலையாகிறது இப்போதைக்குக் கஸ்டமாம்."

"அதைத்தானே இமிகிரேசனும் சொல்லுது." நீதன் அலுத்துக் கொண்டு நிமிர்ந்திருந்தான்.

"ஓம்... ஆனால், இதுக்கு முதல், இப்படியான கேஸில இருந்து இரண்டொரு பேர் சிம்பிளா வெளியில போயிருக்கினம். அதுக்கு அவயள் ஃபாலோ பண்ணின வழியை நீங்களும் கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தால், இப்போதைக்கு டெம்பரறி விசாவிலயேனும் வெளியில வந்திருந்து, பிறகு மேற்கொண்டு கேஸச் செய்யலாம்."

நீதனுக்கு இப்போது ராதா முழுதாகவே ஆச்சரியத்தின் உருவமாகத் தெரிந்தாள். நேற்றுவரைக்கும் இந்த முகாமுக்குள் இருந்தவள், திடீரென்று வெளியிலிருந்து வந்து, தனது விடுதலைக்கு வழி சொல்கிறாளே என்ற புதிராகத் தெரிந்தாள்.

ராதாவின் கண்கள் கல்கிஸ கடற்கரையில் முத்தமிட்டபோது பதற்றமடைந்ததுபோலத் துடித்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுவடைக் காலமடா...

நெல்லை நீ விதைத்து விட்டால்
அதை வாஞ்சையுடன் உடனே
செய்து விடு அறுவடையை
உழுந்தை நீ விதைத்துவிட்டு
அறுக்க முடியுமா? நெல்லை

நல்ல விதையை நீ இட்டு விட்டால்
அதிக விளைச்சலை அடைந்திட
முடியுமென்றால் கெட்ட
விதையை விதைத்து விட்டு
பெறமுடியுமா? நல்ல பயிரை

அரசன் அன்றறுப்பான் இறைவன்
நின்றே கொல்வான் அது அப்பட்டமான மெய்
கொத்துக் கொத்தாக குண்டடித்து
நயவஞ்சகத்துடன் அபயம்
புகுந்தோரைக்கூட
கொன்றொழித்த கூட்டத்திற்கு

கடவுள் இட்ட சாபமடா
கோடிக்கணக்கான கண்கள் சிந்திய
நீரடா சுப போகம் பலவற்றை நீக்கமுற -
அனுபவித்த மாண்பினர்க்கு
வந்ததோ கடும் சாப தோஷம்

**கவிக்கோ, ஏழாலை.**

## அடிமைகள் நாம்



வளம் பல உண்டு எம் மண்ணில்
வலுவான உடலுண்டு எமக்கு
ஆனாலும் அடிமைகள் தான் நாமின்னும்
ஆம் ஒளியாக்க முடியுமாக இருந்தும்
வெளிச்சம் வருமென காத்திருக்கின்றோம்
வாழும் வாழ்க்கை வசதிகள்
தெரிந்திருந்தும் நாம்
அந்நிய ஆடம்பர வசதிகளே
தேவையென நாடுகின்றோம்
உணவுப் பொருளாயினும்
வேறு பொருட்களாயினும்
உற்பத்தி செய்யும் திறன் இருந்தும்
உடலுழைப்பு இல்லா உல்லாசத்தில்
மூழ்கிக் கிடக்கின்றோம்
ஆயுள் வரை ஆரோக்கியமாய்
வாழும் வழிகள் தெரிந்திருந்தும்
அன்னியராட்சி அன்று
காட்டித்தந்த வாழ்க்கை முறைக்கே
அடிமையாக கிடக்கின்றோமே!
மீண்டெழ மாட்டோமா?

**சி.இ.அன்புதுரை**
**சம்மட்டியோலை மானிப்பாய்.**

## அச்சாணி அற்ற தேர்

அநியாயத் தேர் ஊர்ந்து
புவி ஆடி எண்ணியோர்
அவனியில் வாழ்ந்ததில்லை.
அநியாய அதிகாரம்
அவனியில் நிலைத்தெங்கும்
அமைதியைக் கண்டதில்லை.

பேச்சுப் பல்லக்கில்
புவி ஆடி எண்ணியோர்
அரசுகள் வாழ்ந்ததில்லை.
கீச்சுக் கீச்சென்னும்
கிளிப்பிள்ளைச் சோதிடத்தில்
திளைத்தவர் நிலைத்ததில்லை.

ஏச்சுக்கும் பேச்சுக்கும்
எழில் சேர்த்துச் சோடிக்கும்
வரலாறு வாழ்ந்ததில்லை.
கத்தும் அடல் அலையாய்
திக்கெட்டும் எதிரொலிக்கும்
வித்தைகள் வாழ்ந்ததில்லை.

அச்சாணி அற்ற தேர்
அறம் அறியாப் பாகனால்
அநியாயப் பாதை ஊரும்
திறமற்ற செயல்வல்லோர்
பலர்கூடி அசைத்தாலும்
புவி வாழ்வில் வென்றதில்லை.

**வளவை வளவன்**

## மௌனத்தின் தேடல்- 569



## எனது குடும்பம்

அப்பா டாக்டர்
அநுராதபுரத்தில்
அம்மா பேராசிரியர்
கண்டியில்
தாத்தா, பாட்டி
முதியோர் இல்லத்தில்
எங்களையும் நாயையும்
பார்க்க ஒரு ஆயா
வீட்டில்

**பி.யதுர்சன்**
**கொக்குவில் இந்து கல்லூரி**

## மௌனத்தின் தேடல்- 570



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அன்றும் இன்றும்

அன்று...
கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை
குடும்பம் கோவில் என்றார்.
இன்று...
கூடி வாழ்தல்
குடும்பத்துக்காகாது
தனிமையில் சுயநல வாழ்வே
கோடி சேர்க்கும் என்றார்.

**இந்திரன்**
**யாழ்ப்பாணம்.**

## நிலை

உறவுகள் கூடி
ஒன்றாய் இருந்து
உணவுகள் உண்டு
சிரித்து மகிழ்ந்த காலத்தை
வெறும் புகைப்படங்களிலேயே
பார்த்து வியக்கிறது
இன்றைய சமூகம்...

**நிலக்ஷனா, வதிரி.**

## இப்போ எங்கோ?

அன்பான
அம்மா, அப்பா
பாசமான
தாத்தா, பாட்டி
குறும்பான
தம்பி, தங்கை
கூட்டுக்குடும்பம்; குதூகலம்
இவை இப்போ எங்கோ
காணாமல் போய் விட்டன

**பிரமன்**
**கொக்குவில்.**

## கூட்டுக்குள்ளே...

பேர்த்தி பேரன் எம்மோடிருந்தால்
ஆத்திசூடி கொன்றைவேந்தன்
ஔவை பாவை ஊட்டுவர்
ஏத்திப் போற்றும் திருக்குறளை
இனிமை கூட்டிப் பாடுவர்
அன்னை பிதா தெய்வமென அன்பை
அழகு சேரக் கல்வி புகட்டுவர்
கூட்டுக்குள்ளே கூடி வாழக் காலம் வர
கூடிக் கடவுளிடம் வேண்டுவோம்.

**கை.க.தவமணிதாசன்,**
**நல்லூர்.**

## கூட்டுக் குடும்பம்

கூட்டுக் குடும்பத்திற்கேது ஈடு
குதூகலமாய் வாழ்வு செழிக்கும்
நாட்டுக்கான நயமாம் பிரசை
நற்படிக்கவழக்கம் மலர்ந்து
பேரன் பேர்த்தி கூட இருந்து
குடும்பத்திற்கு புத்தி புகட்டி
தாயும் தந்தை தகைமை சேர
தக்க வாழ்வு சிறப்புத்தாமே.

**வைகதன்,**
**கொக்குவில்.**

## கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

உலகில் உறவுகள் எல்லாம் இப்படிக்
கூட்டுக் குடும்பமாய் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
அதுவே என்றும் உண்மை

**சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் தொழில் திறன் அதிசயங்கள் பகுதி - 1

அந்த மணி காற்றின் அலைவுறுதலுக்கு ஏற்க ஒலித்துக்கொண்டே இருக்கும் அது அமைந்திருக்கும் உயரத்தைப்பார்த்து மாலுமிகள் கப்பலை வேறு பாதைக்கு திருப்பி வந்தனர். ஆனால் அந்த மணி நிர்மாணிக்கப்பட்ட ஒரே வருடத்தில், ரால்ப் என்ற கடற்கொள்ளையன் அதை திருடிச்சென்று விட்டான். ஆனால் அதனை அவன் பயன்படுத்தவும் முடியாமல், வைத்திருக்கவும் முடியாமல் ஒரு நாள் கடலில் தூக்கிப் போட்டுவிட்டான். மணி தொலைந்து போனாலும் அந்த பாறைக்கு மணிப்பாறை (Bell Rock) என்கிற பெயர் நிலைத்து விட்டது.

சிலகாலம் மணி இருந்த படியால் அந்த இடம் மாலுமிகளுக்குப் பழக்கமான இடமாகிவிட்டது. என்றாலும் பாறை மீது மோதிவிடும் அபாயம் இருப்பதாகக் கருதியதால் கப்பலை ஆங்கஸ் கடற்கரைக்கு செலுத்தத் தயங்கினார்கள். இதனால் கப்பல் போக்குவரத்தை அதிகம் நம்பியிருந்த வணிகர்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

நாட்டின் வரி வருமானமும் குறைந்தது. இதற்கு மாற்று ஏற்படாக என்ன செய்யலாம் என யோசித்த துறைமுக அதிகாரிகள், அந்த பாறை மீது ஒரு கலங்கரை விளக்கத்தைக் கட்டிவிடலாம் என முடிவு செய்தார்கள். பாறை மீது மோதிவிடுமோ என்கிற அச்சம் நீங்கிவிடும் அதே சமயம் வருகின்ற கப்பலுக்கு வழிகாட்டியாகவும் இருக்கும் என்று இந்த யோசனைக்கு வந்தார்கள்.

கலங்கரை விளக்கக் கட்டுமானப் பணியை ராபர்ட் ஸ்டீவன்சன் என்ற பொறியாளரிடம் ஒப்படைத்தனர். ஆனால் கலங்கரை விளக்கத்தைக் கட்டி முடிப்பதற்குள் சொல்லொண்ணாத துயர்த்தை தொழிலாளர்களும் ஸ்டீவன்சனும் அனுபவித்தார்கள். நல்ல வேளையாக சகுனம்,நேரம், காலம் இவற்றைப் பற்றி எல்லாம் அதிகம் கவலைப் படாதவர்களாக இருந்ததால், அவர்கள் நினைத்து போல் அவர்களால் கடற்கரையை விட்டு விலகி கடலுக்குள்ளே அமைந்த, உலகின் மிக உயரமான கலங்கரை விளக்கத்தைக் கட்ட முடிந்தது.


மூன்று வருடத்துக்குள் கட்டி முடிக்க வேண்டும் என்பதால் அவர்கள் ஒரு நாளைக்கு சுமார் 20 மணி நேரம் வரை உழைக்க வேண்டியிருந்தது. ஞாயிற்றுக்கிழமையும் கூட அவர்கள் ஓய்வெடுக்கவில்லை.

கட்டுமானப் பணியின் போது ஒரு முறை பளுதூக்கும் இயந்திரம் ஒன்று முற்றிலும் உடைந்து பலர் விபத்துக்கு உள்ளாயினர். சில நாட்களில் கொத்தனார் ஒருவரின் கால்களில் பெரிய இரும்புத் துண்டு விழுந்து கால்கள் துண்டாயின.

கற்சிற்ப வேலை செய்யும் ஒருவன் வேலை சமயத்தில் கடலுக்குள் விழுந்து மாயமாகிப்போனான். அவனது உடல் கூடக்கிடைக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக ராபர்ட் ஸ்டீவன்சனின் இரட்டை ஆண் குழந்தைகள் விஷக்காய்ச்சல் கண்டு அடுத்து அடுத்து இறந்து போனார்கள். இந்த மரண அடியிலிருந்து எழுவதற்குள் ஸ்டீவன்சனின் மகளும் ஏதோ ஒரு வியாதியில் இறந்து போனாள்.

(தொடரும்...)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2679

### கிருத்திகா


அடேய்! அட்வைஸ் பண்ணா ஒழுங்கா அட்வைஸ் பண்ணுங்கடா அது என்ன எல்லா அட்வைஸ்சையும் பண்ணி முடிச்சிட்டு அப்புறம்...



உன் மனசுக்கு என்ன தோனுதோ அதை செய்யுனு ஏன்டா குழப்பி விட்டுட்டு போறிங்க...

### அக்சயா

இருப்பவர்களுக்கு அலட்சியமாக இருக்கும்



இல்லாதவர்களுக்கு தான் தெரியும் தாய், தந்தையின் அருமை

### தரனியா

சோகம் தீர்க்கும் மருந்து மதுவிடமோ, மதகுருவிடமோ இல்லை..!!



ஆனால் நம் குழந்தைகளுடனான ஐந்து நிமிட உரையாடலில் இருக்கிறது...!!

### தாரணி

பெண்தானே என்று
தாழ்வாக
நினைக்காதே..
அவள் அங்கீகரிக்கா
விட்டால்
உன்னை ஆண்மகன்
என்று
உலகம் ஒரு போதும்
ஏற்றுக்கொள்ளாது.

### ஐஸ்மிதா

20 ஆயிரத்திற்கு துணி எடுத்திருக்கோம் ஏதாவது கிப்ட் கொடுங்களன் அண்ணாச்சி...
லெஜெண்ட் பட டிக்கெட் இருக்கு வேணுமா..




### அபிராமி

எங்கம்மா அடிக்கடி சொல்லும், உனக்குனு ஒருத்தி இனிமேல் பிறக்கவா போறா, எங்கயாது இருப்பானு.



அவள பார்த்து கேட்கிறேன், ஒரு மிஸ்டுகால் ஆச்சும் தாடி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல் 302

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# மாரடைப்பு

நமது உடலில் ஓய்வில்லாமல் கடிகாரம் போல் இயங்கும் உறுப்புக்களில் இதயமும் ஒன்று. இவ் இதயத்தைத் தாக்கும் மாரடைப்பானது (Heart Attack) உயிரைப் பறிக்கக் கூடிய அபாயகரமான நோயாகும். இவ் ஆக்கத்தில் நாம் மாரடைப்பு ஏன் ஏற்படுகின்றது? மாரடைப்பிற்கான அறிகுறிகள், சிகிச்சை முறைகள் மாரடைப்பின் பின் வாழ்க்கை முறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றி சுருக்கமாக ஆராயவுள்ளோம்.

**மாரடைப்பு என்றால் என்ன?**

இதயத்தசைக்கான ஒட்சிசன் நிறைந்த குருதியை முடியுரு நாடிகள் வழங்குகின்றன.முடியுரு நாடிகள் ஏற்படும் கொழுப்புப் படிவுகளாலும் அக்கொழுப்புப் படிவுகளில் ஏற்படும் வெடிப்புகளில் குருதிக்கட்டிகள் படிவதாலும் முடியுரு நாடிக்குழாய்கள் முற்றாக அடைக்கப் படும் போது இதயத் தசைக்கான ஒட்சிசன் நிறைந்த குருதி இல்லாது போகிறது. இதனால் இதயத்தசை இறப்படைகின்றது..இதுவே மாரடைப்பு ஆகும்.

இதன்போது இதயத்துடிப்பின் போது சுருங்கி விரியும் செயற்பாடு பாதிப்படைகின்றது. இதயத்தசையின் இறப்படையும் பகுதியின் அளவு கூடும் போது இதயத் தொழிற்பாடு குறைவடைந்து இதயப் பலவீனம் ஏற்படுகின்றது. இதனால் இறப்பும் ஏற்படலாம்.

**மாரடைப்புக்கான அறிகுறிகள் என்ன?**

இடதுபக்க அல்லது நடுநெஞ்சில் ஏற்படும் இறுக்கிப்பிடிப்பது போன்ற நெஞ்சுவலி. நெஞ்சுவலியுடன் தாடைகள் இறுகுதல் அல்லது தோறப்பட்டையில் ஏற்படும் நோ. நெஞ்சுவலியுடன் வியர்த்தல்,வாந்திஎடுத்தல், மூச்சு விடச் சிரமம், தலைசுற்றுதல்,மயக்கம், நெஞ்சு பட படப்பு போன்றன ஏற்படல். நடந்து செல்லும்போது அல்லது பாரமான வேலை செய்யும் போது திடீரென ஏற்படும் நெஞ்சுநோ. நடுநெஞ்சில் ஏற்படும் எரிவு அல்லது மேல் வயிற்று நோ. இது வயிற்றுக் கோளாற்றுடன் சம்பந்தமானதாக இருக்கலாம் என அநேகமான நோயாளிகள் புறக்கணிப்பதுண்டு.

மேற்கூறிய அறிகுறிகளின்றியும் மாரடைப்பு ஏற்படலாம் இது (Silent myocardial infarction) பொதுவாக நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும். அதைவிட சில நோயாளிகள் நெஞ்சுப் பகுதியில் ஏற்படும் தசை நோவை தவறாக மாரடைப்பு என்று எண்ணி மருத்துவர் உதவியை நாடுவதும் உண்டு.

**மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கும் காரணங்கள் எவை?**

மாரடைப்புக்கான சரியான காரணங்களைத் தெளிவாக அறிந்துகொள்வதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தைக் குறைக்கலாம். இக்காரணங்கள் இருவகையானவை

1) மாற்றமுடியாத காரணங்கள். அதாவது இவை இயற்கையான காரணங்கள். இவை பற்றி நாம் தெரிந்து கொண்டாலும் கூட மாரடைப்பு ஏற்படுவதை எம்மால் தவிர்க்கமுடியாது.

ஆண்கள்,வயதானவர்கள் (65 வயது) இதய நோயால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்டவர்கள் இவர்களுக்கு சாதாரணமான ஒருவரை விட மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

**2) மாற்றக்கூடிய காரணங்கள்**

இவற்றை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

நீரிழிவுநோய் - இவர்களுக்கு மற்றவர்களுடன் ஒப்பிடும் போது மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம். இவர்கள் மருந்துகளை சரியான அளவில் ஒழுங்காகப் பாவிப்பதாலும் உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொள்வதாலும் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.



அதிகரித்த கொழுப்பின் அளவு இரத்தத்தின் கொழுப்பின் அளவு மரபு வழியாகவும் உணவுப்பழக்கங்களில் கவனம் செலுத்தாமையினாலும் தைரொயிட், சிறுநீரகக்கோளாறுகள் போன்ற நோய்களாலும் மதுப்பழக்கத் தாலும் அதிகரிக்கின்றது. இதனால் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கின்றது.அதிகரித்த கொழுப்பின் அளவு உள்ளவர்கள் சரியான உணவுப்பழக்கவழக்கம், உடற்பயிற்சி, மருந்துகள் உட்கொள்வதன் மூலம் மாரடைப்பைக் குறைக்கலாம்.

அதிகரித்த இரத்த அழுத்தம்:- சரியான மருந்துகள் உட்கொள்ளல், உடற்பயிற்சி, உணவுக்கட்டுப்பாடு, புகைத்தல் மற்றும் மதுபாவனையை நிறுத்துதல் மூலம் அதிகரித்த இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டாக வைத்திருந்து மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

அளவுக்கதிகமான மதுபாவனை, புகைப்பிடித்தல் சாதாரண ஒருவரை விட இவர்களுக்கு இரத்த அழுத்தம் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம். புகைத்தல், மதுபாவனையை நிறுத்துதல் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

மன அழுத்தம் :- மன அழுத்தம் உள்ளவர்கள் தியானம், மூச்சுப்பயிற்சி உள்ளிட்ட யோகாப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

அதிக உடற்பருமன்:- எப்போதும் உடல் எடையைக் குறைத்து வைத்திருப்பது மாரடைப்பு மட்டுமல்லாது வேறு உடல்நலப் பிரச்சினைகளில் இருந்தும் நம்மைக் காப்பாற்றும். இதனால் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமக்கு நீரிழிவு, அதிகரித்த இரத்த அழுத்தம், அதிகரித்த கொழுப்பு உள்ளதா என ஆண்டுதோறும் பரிசோதித்துப் பார்ப்பதன் மூலம் கண்டறியப்படாத நோய்களினால் ஏற்படும் மாரடைப்பு வீதத்தைக் குறைக்கலாம்.

**மாரடைப்பு ஏற்பட்டுள்ளதை மருத்துவர் எவ்வாறு இனங்காணுவார்?**

நோயாளியின் அறிகுறிகள் பூரண நோய் வரலாற்றை அறிந்து கொள்வதன் மூலமும் நோயாளியைப் பரிசோதிப்பதன் மூலமும்.

ECG எனப்படும் இருதய வரைபுப் பட்டி:- இது மாரடைப்பின் தொடக்கத்தில் மாற்றங்கள் எதனையும் காட்டாது தொடர்ச்சியாக எடுக்கப்படும் போது மாறுதல்களைக் காட்டுவதாக இருக்கலாம். பொதுவாக மாரடைப்பு ஏற்படும் போது ECG இல் உள்ள மாற்றங்களைக் கொண்டே ஆரம்ப சிகிச்சை முறை தீர்மானிக்கப்படும்.

இரத்தப் பரிசோதனைகள் :- குறிப்பாக ரொபோனின்-I(Troponin-I) இது மாரடைப்பு ஏற்பட்டு 4-6 மணித்தியாலங்களில் அதிகரிக்கும்.

எக்கோ (Echo) பரிசோதனை இதன் மூலம் மாரடைப்பின் போது இருதயத் தசைகள் பலவீனமடைந்துள்ளதா அல்லது இருதயத் தொழிற்பாடு குறைவடைந்துள்ளதா என அறிந்து கொள்ளலாம்.

ETT எனப்படும் (Treadmill test) இது மாரடைப்பின் பின்னரும் மாரடைப்பு ஏற்படும் முன்னரும் கூட நடக்கும் போது ECG இல் ஏற்படும் மாற்றங்களை வைத்து மேலதிக பரிசோதனையான அஞ்சியோகிராம் பரிசோதனையைத் (Coronary Angiogram) தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்கும்.

அஞ்சியோகிராம் (Coronary Angiogram) பரிசோதனை இருதயத்திற்கான இரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்பு வீதத்தையும் அடைப்பு காணப்படும் குருதிக் குழாய்களையும் இனங்கண்டு கொண்டு சிகிச்சை முறையை (Angio plasty/CABG) தீர்மானிப்பதற்கு உதவும்.

**மருத்துவர் மாரடைப்பின் போது உங்களுக்கு வழங்கும் சிகிச்சை முறைகள் எவை?**

இரத்தம் உறைவதனைத் தவிர்க்கக் கூடிய மருந்துகள் வழங்கல்.

உ-ம் - அஸ்பிரின் (ASprin), குளோபிடோகிறல் (Clopidogrel)

நெஞ்சுவலியைக் குறைக்கும் மருந்துகள் வழங்கல்.

உ-ம் - ISMN, GTN

இரத்த அழுத்தத்தை சீராக்கும் மருந்துகளும் இருதயத்துடிப்பைக் குறைத்து இருதயத்திற்கான இரத்த வழங்கலை அதிகரிக்கும் மருந்துகளும் வழங்கல்.

உ-ம் - கப்ரோபிறில் (Captopril), அடினலோல் (Atenolel)

ஒட்சிசன் இருதயப் பலவீனம் ஏற்பட்டவர்களுக்கு பெரிதும் உதவும்.

இரத்தக்குழாய்களில் உள்ள இரத்தக் கட்டிகளைக் கரைக்கும் (Thro- ஸ்றெப்ரோகைனேஸ் (Streptokainese), RTA இதனால் இரத்தோட்டத்தை இதயத்தசை மீளப்பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. நோயாளி ஒருவர் நெஞ்சுவலி ஏற்பட்டு எவ்வளவு குறுகியநேர இடைவெளியில் சிகிச்சை பெற வருகின்றாரோ அவ்வளவு இம்மருந்துகள் பயன்படுத்தக்கூடியதாகவும் 12 மணித்தியாலங்களுக்குள் பலனைத் தருவதாகவும் இருக்கும்.

ஆரம்ப சிகிச்சையைத் தொடர்ந்து அன்சி யோகி ராம் பரிசோதனையின் பின்னர் அடைப்புகளுள்ள இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்யும் ஸ்றெனட் (stent), இடப்படுதலோ (Angioplasty) இருதய சத்திரசிகிச்சை (ABG) செய்யப்படுவதாலோ மீள் குருதியோட்டம் பெறப்படும். இதனால் இருதயத் தசைகளுக்கு ஒட்சிசன் நிறைந்த குருதி வழங்கப்ப்டும். இருதயத்தசை இறப்படைதல் தடுக்கப்படும். இதனால் மரணம் தவிர்க்கப்படும்.

**மாரடைப்பின் மின்னர் எமது வாழ்க்கை முறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் என்ன?**

உணவுப் பழக்கத்தில் ஏற்படும் மாற்றம் உணவில் கலோரி குறைந்த உணவுகளான காய்கறிகள், விற்றமின்கள், கனியுப்புக்கள், நார்த்தன்மை நிறைந்த உணவுகள், பழங்கள் என்பவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். கொழுப்புச்சத்து குறைந்த தாவர எண்ணைய், சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய்,ஆடை நீக்கிய பால் என்பவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். மஞ்சட்கரு, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, நண்டு, இறால் கணவாய், பெரியமின்கள் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மருந்துகளை சரியான அளவில் சரியான முறையில் பாவித்தலும் தவறாது கிளினிக் செல்வதன் மூலம் இரத்த அழுத்தம், இரத்தப் பரிசோதனைகளை கிரமமாகப் பார்த்துக் கொள்வதும் அத்தியாவசியம்.

மாரடைப்பினால் ஏற்படும் உடல் உளபாதிப்பை குடும்ப அங்கத்தவர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும். சிலர் மீதமுள்ள ஆயுள் முழுவதும் பிறரில் தங்கிவாழும் நிலைமை ஏற்படும் போது ஏற்படும் மனச்சோர்வையும் மன அழுத்தத்தையும் நீக்க மருத்துவரின் உதவியையோ அல்லது உளவள ஆலோசகர்களின் ஆலோசனையையோ நாடலாம்.

உடற்பயிற்சி செய்வது மாரடைப்பினால் ஏற்படும் இருதயப் பலவீனத்தின் அளவைப் பொறுத்து தீர்மானிக்கப்படும். சாதாரணமாக நோயாளி தனக்கு களைப்பு ஏற்படாத வகையில் ஆரம்பித்து படிப்படியாக வேகத்தையும் நேரத்தையும் அதிகரித்து ஒரு நாளில் 20-30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதை வழக்கத்தில் ஏற்படுத்த வேண்டும்.

இளவயதில் மாரடைப்பு ஏற்பட்டவர்கள் சிக்கல்கள் அற்ற மாரடைப்பாயின் 4 கிழமைகளின் பின்னர் உடலுறவை மேற்கொள்ளலாம். மதுபாவனையையும் புகைப்பிடித்தலையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

உடற்பருமனை உயரத்திற்கு ஏற்ப குறைக்க வேண்டும்.

இருதய சத்திரசிகிச்சை அல்லது ஸ்றெனட் (Stent) வைக்கத் தேவையானவர்கள் தமக்கு உரிய சிகிச்சை முறையை உடடியாக தீர்மானிப்பதன் மூலம் மாரடைப்பின் பின்னான மரணத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

மருத்துவ கலாநிதி. P.லக்ஷ்மன்
இருதய மருத்துவ நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி அரசின் பின்னர் புதிய அரசை தெரிவு செய்ய மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்

## ஜனாதிபதிக்கு மைத்திரி கடிதம்

(கொழும்பு)

சர்வகட்சி அரசாங்கத்தின் பதவிக்காலம் நிறைவடைந்து புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கான ஜனநாயக சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

அதே போன்று இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும்போது கட்சிகளுடன் இணக்கப்பாடுகளை எட்ட வேண்டுமே தவிர, கட்சிகளிலுள்ள தனித்தனி அரசியல்வாதிகளுடன் அல்ல என்பது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிலைப்பாடாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதைய ஜனாதிபதி என்ற வகையில் சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவுவதற்கு நீங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறீர்கள் என்பதை பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல கட்சிகள், பொதுமக்கள், சிவில்செயற்பாட்டாளர்கள், அமைப்புக்கள், நிபுணர்கள், தொழிற்துறையினர்கள் நம்ப வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கான சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை "நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்கான அமைச்சரவையாக" வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுவதோடு, மேற்கூறப்பட்ட அனைத்து ,தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அமைய வேண்டும்.

இலங்கையில் எழுந்துள்ள சமகால சமூக பதற்றங்கள் மற்றும் எதிர்ப்புகள் போன்றே மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள சில நாடுகள் பல ஆண்டுகளாக மிகவும் ஸ்திரமற்ற மற்றும் அராஜகமான நிலைமையில் உள்ளன.

அவ்வாறானதொரு நிலைமையை நோக்கி இலங்கை நகராமல் இருப்பதற்கு, சர்வகட்சி அரசாங்கத்தின் பதவிக்காலம் நிறைவடைந்து புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கான ஜனநாயக சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்க வேண்டும் என தெரிவித்தார். (4)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான மருத்துவ பரிசோதனை கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான மருத்துவ பரிசோதனைக்கட்டணங்கள் நாளை திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் மருத்துவ பரிசோதனை கட்டணம் மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களின் விலை அதிகரித்துள்ளதால் இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி, இலகுரக வாகனங்களுக்கான மருத்துவ பரிசோதனை கட்டணம் 1,500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கனரக வாகனங்களுக்கான மருத்துவ பரிசோதனை கட்டணம், சிறுநீர் பரிசோதனை தவிர்த்து 1500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (4)

# பிரித்தானியாவில் காணாமல்போன இலங்கை வீரர்கள் அடையாளம்

(கொழும்பு)

பிரித்தானியாவில் நடைபெற்று வரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் இருந்து காணாமல் போன இலங்கை வீரர்களில் இருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பர்மிங்காமில் மர்மமான முறையில் காணாமல் போன இலங்கையைச் சேர்ந்த இரண்டு விளையாட்டு வீரர்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வெஸ்ட் மிட்லாண்ட்ஸ் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர் அத்துடன் காணாமல் போனவர்களில் ஒருவரை இன்னும் காணவில்லை எனவும் அவ் ஊடகம் தெரிவித்துள்ளது. (4)

# நாட்டில் வரிசை இல்லாத நிரப்பு நிலையம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வரிசை இல்லாத ஒரு எரிபொருள் நிலையம் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

எவ்வித வாடிக்கையாளரும் வரிசையின்றி எரிபொருளை பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்றை குளியாபிட்டிய தண்டகமுவ ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையம் முன்னெடுத்துள்ளது.

அந்த நடைமுறை வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

"Poling without polling" என்ற பெயரில் விண்ணப்ப படிவம் மூலம் இந்த விசேட எரிபொருள் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த விண்ணப்பம் மூலம், வாடிக்கையாளர்கள் வரிசையில் நிற்காமல் எரிபொருளைப் பெறுவதற்கான திகதி மற்றும் நேரம் ஒதுக்கப்படுகிறது.

இந்த வசதியைப் பெற, தேசிய எரிபொருள் அட்டையில் பதிவு செய்து, QR குறியீட்டை வைத்திருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும். (4)


**மணமகன் தேவை**

1990, அவிட்டம், யாழ்ப்பாணம், Development Officer. மணமகள் பதிவு இல 7943. பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.
அழையுங்கள் 076 664 9401 (C-1759)

**மணமகன் தேவை**

1991, ரேவதி, பருத்தித்துறை, optician, மணமகள் பதிவு இல: 7901. பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.
அழையுங்கள் 076 664 9401 (C-1759)

**மணமகன் தேவை**

1991, புனர்பூசம் . கோப்பாய், Civil Engineer, மணமகள் பதிவு இல: 7832. பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை . www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.
அழையுங்கள் 076 664 9401 (C-1759)

**மணமகன் தேவை**

1983, மூலம், யாழ்ப்பாணம், Teacher, மணமகள் பதிவு இல: 7815. பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.
அழையுங்கள் 076 664 9401 (C-1759)

**மணமகள் தேவை**

1993, பூராடம் , காரைநகர், Software Quality Assurance Engineer, மணமகன் பதிவு இல: 8032. பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.
அழையுங்கள் 076 664 9401 (C-1759)

**மணமகள் தேவை**

1989, மிருகசீரிடம், யாழ்ப்பாணம், Bank, மணமகன் பதிவு இல: 8030. பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை . www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.
அழையுங்கள் 076 664 9401 (C-1759)

**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 65 ¼ சூரி 9 செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L மண் பரிசோதகர்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ: B/9934

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 1
கி.பா: சூரி 2 செவ் 5 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L வியாபாரம் சொந்தத்தொழில்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது உத்தியோகம்
தொ.இ: B/9950

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: சூரி 4 செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் PR இல்லை
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR உள்ளவர்கள்
தொ.இ: B/9942

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: சூரி 6 செவ் 3 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: B.Sc(Greenwich), M.Sc (Pera) Senior Software Developer
எதிர்பார்ப்பு: பட்டதாரி சைவபோசணம் விரும்பத்தக்கது
தொ.இ: B/9959

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா: சூரி 12 செவ் 11 இல்
உயரம்: 4'9"
தகைமை/தொழில்: M.Sc .Bio informatics, M.Sc Yoga (India) Yoga Instructor, Fitness Trainee
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: G/9922

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 91 சூரி 12 செவ் 8 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L அரசதொழில்
எதிர்பார்ப்பு: அரசதொழில் உள்நாடு மட்டும்
தொ.இ: G/9924

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 31 சூரி 4 செவ் 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: B.Sc, M.Sc (Pera) ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச தனியார் தொழில்
தொ.இ: G/9958

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: சூரி 11 செவ் 7 .ல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Biology Computer Science (America) Data & Analytics Consultant -America
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/9976

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததான முகாம்

(குருநகர்)

யாழ்.மாவட்ட இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினரால் இலங்கை வங்கியின் 83 ஆவது ஆண்டு நினைவினை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 1.30 மணிவரை இரத்ததான முகாம் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி கிளையில் இடம்பெறும். (4-106)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான வீதியை நெல்லியடி பிரபல வர்த்தகர் ரி.தயாபரன் தனது சொந்த செலவில் புனரமைத்து அதனை பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.




## வவு.நிரப்பு நிலையங்களில்
# நாட்கணக்கில் நீண்டவரிசையில் வாகனங்கள் நிறுத்த தடை

(குருமன்காடு)


வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வாகனங்களை தொடர்ந்தும் நீண்ட வரிசையில் நிறுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ரொசான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

நாடு பூராகவும் எரிபொருள் விநியோகத்தை சீராக விநியோகிக்கும் முகமாக எரிபொருள் அமைச்சினால் தேசிய ரீதியில் எரிபொருள் அட்டை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நீண்ட வரிசையின்றி எரிபொருளை பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வவுனியா எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வருவதற்கு முன்னதாகவே வாகனங்களை நிறுத்தி வரிசைப்படுத்தி நாட்கணக்கில் விடுவதன் மூலம் விபத்துகள் ஏற்பட்டு வருவதுடன், போக்குவரத்து அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் வர்த்தக நிலையங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வருகின்ற போது வாகனங்களை வரிசைப்படுத்தி ஓர், இரு மணித்தியாலங்களுக்குள் எரிபொருளை பெற்றுக் கொள்ளுமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்துவதுடன், நாட்கணக்கில் வாகனங்களை நீண்ட வரிசையில் நிறுத்தி வைப்பதை தவிர்க்குமாறும் அவர் தெரிவித்தார். (4-250)

# எரிபொருள் இன்மை
# சுண்டிக்குளம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு



(கருமபுரம்)

சுண்டிக்குளம் கடல் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் 100 ற்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் தமது குடும்ப வாழ்வாதாரம் மிகக் குறைவாக பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

தாம் நாளாந்தம் கடலுக்கு செல்வதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற வருமானத்திலே நாளாந்த வாழ்க்கைச்செலவை மேற்கொள்வதாகவும் தற்பொழுது எரிபொருள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் தமது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந் நிலை தொடருமாயின் கடற்றொழிலை கைவிட நேரிடும் எனவும் இதன் காரணமாக சம்பந்தப்பட்ட கடற்றொழில் அமைச்சர் மண்ணெண்ணெய் மற்றும் எமக்குத் தேவையான எரிபொருளை பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுத்து மீனவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி புரியுமாறும் தெரிவித்துள்ளனர். (4-316)



கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்கள் 11 பேரின் சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் 5 ஆம் திகதி சங்க காரியாலயத்தில் நடைபெற்றது.

# கிளிநொச்சியில் இன்று இலவச மருத்துவ முகாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 7 மணிவரை கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் சுப்பிரமணியம் இராசம்மா மணிமண்டபத்தில் இடம்பெற உள்ளது.

பரந்தன் இ.ம.வி.ப.மா சர்வதேச ஒன்றியம், குமரபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், குமரபுரம் முருகன் ஆலய பரிபாலன சபை, பரந்தன் இளைஞர் வட்டம் ஆகிய அமைப்புக்களின் அனுசரணையில் நடைபெறும்.

இந்த இலவச மருத் துவ முகாம் நிகழ்வில் குருதி அமுத்தம், நீரிழிவு நோய், பல் மருத்துவம், கண் மருத்துவம், உணவுப் பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சி ஆலோசனைகள் என்பன இலவசமாக வழங்கப்பட உள்ளன.

இதேவேளை, துறைசார் மருத்துவர்கள் பங்குபற்றும் குறித்த மருத்துவ முகாமில் இணைந்து மக்கள் தமக்குத் தேவையான இலவச மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-18)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 240 | 300 |
| உருளைக்கிழங்கு | 320 | 220 | 220 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 500 | 450 |
| தக்காளி | 250 | 380 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 300 | 200 |
| கோவா | 180 | 300 | 400 | 350 |
| கரட் | 250 | 320 | 380 | 400 |
| பூசணி | 120 | 150 | 120 | 140 |
| புடோல் | 140 | 100 | 160 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 160 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 360 | 400 | 480 |
| பெரிய வெங்காயம் | 300 | 210 | 220 | 200 |
| பாகற்காய் | 300 | 250 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 240 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 300 |
| லீக்ஸ் | 240 | 230 | 260 | 280 |
| பீற்றூட் | 120 | 200 | 160 | 150 |
| கறிமிளகாய் | 600 | 400 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 600 | 500 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | 160 | 250 |
| கீரை - 1 பிடி | 160 | 100 | 150 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 240 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 40 | 90 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 140 |

# எதிர்வரும் 12 ஆம் திகதி உறவுகள் மாபெரும் போராட்டம்

(முறிகண்டி)

கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தில் அரசியல்வாதிகள் கூட எமது போராட்டம் தொடர்பில் பேசி வலுச்சேர்க்கவில்லை என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, மாவட்ட சங்க தலைவி க.கோகிலவாணி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) எங்களுடைய போராட்டம் 13 வருடங்களையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதில் நீதி கிடைக்கவில்லை என்பதால் தனித்துவமாக போராட்டத்தை 8 மாவட்டங்களிலும் முன்னெடுக்க தொடங்கி 5 ஆண்டுகள் கடந்துள்ளது.

6 ஆவது வருடத்திலும் போராடிக் கொண்டிருக்கும் எமக்கு இலங்கை அரசாங்கமும் எந்தவொரு நீதியையும் தரவில்லை. இந்த நிலையில் ஜெனிவா கூட்டத்தொடருக்கு சென்றும் அங்கும் இதுவரை நீதி கிடைக்கவில்லை.

எமக்கு நீதி கிடைக்கும் வரை நாங்கள் போராடிக் கொண்டே இருப்போம். அதே வேளை எமது போராட்டம் தனித்துவமாக ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 2000 நாட்களை அடைகின்றது. அன்றைய தினம் மாபெரும் போராட்டமாக முன்னெடுக்க அனைத்துத் தரப்பினரையும் அழைத்து போராட இருக்கின்றோம்.

அரசியல்வாதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தமிழ் மக்கள் என அனைத்து தரப்பினரும் எமது போராட்டத்திற்கு வலுச்சேர்க்க வேண்டும்.

வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் ஒன்றிணைத்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்படும் பேரணி டிப்போ சந்தியில் நிறைவடையும். இதன்போது ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜரும் கையளிக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார். (4-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலாக நேர்வழியில் வாழ்ந்தால், பிரச்சினைகளும் கவலைகளும் மட்டுமல்ல எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள்.
– நேதாஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சரத் பொன்சேகாவின் பொன்மொழி தமிழ் மக்களுக்குப் பொருந்தாதா?

உலகப் போராட்டங்கள் அமைதியாக நடப்பதில்லை. தியானம் செய்வதன் மூலமும் தவம் செய்வதன் மூலமும் வஞ்சகர்களை விரட்ட முடியாது என முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை மக்கள், புரட்சி செய்து துரத்தியதை ஆதரிப்பதாக சரத் பொன்சேகாவின் மேற்போந்த கருத்து அமைந்துள்ளது.

இதுதவிர, போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதற்கு எதிராகவும் மேற்போந்த கருத்தை அவர் முன்வைத்துள்ளார் எனலாம்.

இதன்படி ராஜபக்ஷ தரப்பை வஞ்சகர்களாகச் சித்தரித்துள்ள சரத் பொன்சேகா, அவர்களைத் விரட்டுவதற்கு மக்கள் முன்னெடுத்த போராட்டத்தை நியாயப்படுத்தியும் தனது கருத்தை முன்வைத்துள்ளார்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்தபின்பு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து சரத் பொன்சேகா போட்டியிட்டதும் அதில் அவர் தோல்வியுற்ற பின்னர் மகிந்த தரப்பு அவரைக் கைது செய்து சிறையில் அடைத்ததும் தெரிந்ததே.

அமெரிக்கா உதவி செய்யாவிட்டிருந்தால், இன்றுவரை சரத் பொன்சேகா சிறையிலேயே தனது வாழ்நாளைக் கழித்திருப்பார்.

ஏதோ அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக சரத் பொன்சேகாவுக்கு விடுதலை கிடைத்திருந்தது. இஃது ஞாபகப்படுத்தலுக்கானது மட்டுமே.

இவை ஒருபுறமிருக்க, தியானம் செய்வதன் மூலமும் தவம் இருப்பதன் மூலமும் வஞ்சகர்களை விரட்ட முடியாது என இப்போது கூறுகின்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தான் நடந்து வந்த பாதையை ஒருமுறை திரும்பிப் பார்ப்பது நல்லது.

ஆம், 2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிந்த கையோடு அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மரியாதை செலுத்தி விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற செய்தியை அறிவித்தவர் இதே சரத் பொன்சேகா என்பதும் இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.

இவ்வாறு தமிழ் மக்களின் போராட்டத்தை இன அழிப்புச் செய்து முறியடித்த சரத் பொன்சேகா இப்போது கூறுகின்ற தத்துவம் தமிழ் மக்களுக்கும் பொருந்துமாயின், புலிகள் நடத்திய விடுதலைப் போராட்டத்தை அவர் ஏற்றுக் கொள்கிறார் என்று பொருள் கொள்வதில் தவறிருக்க மாட்டாது.

ஆம், வஞ்சகர்களை விரட்டத் தமிழ் மக்கள் முன்னெடுத்த தியானமும் தவமும் தோற்றதால்தான் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தினர்.

எனவே தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்ற செய்தி சரத் பொன்சேகா முன்வைத்த கருத்துக்குள் உள்ளடங்கியிருக்கிறது என்பது இங்கு நோக்குதற்குரியது.

## போராட்டங்கள் மேற்கொள்ள மெனிங் மிதக்கும் சந்தைப் பகுதி

கொழும்பு மெனிங் மிதக்கும் சந்தை அமைந்துள்ள பகுதியை போராட்டக்காரர்களுக்கு ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

போராட்டக்காரர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்கள் மற்றும் இளைய தலைமுறையினருடன் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படத் தயார். பொருளாதார போராட்டத்தில் வெற்றி பெறுவதே தற்போதுள்ள சவால்.

இதற்கமைய, இந்த பொருளாதார போராட்டத்தை வெற்றியடைய செய்வதற்காக அனைத்து வகையிலும் இளைஞர், யுவதிகளின் பங்களிப்பை பெற எதிர்பார்த்துள்ளேன் என அவர் தெரிவித்தார். (4-7)

## மகளை கண்டித்த தந்தையின் மண்டையை உடைத்த தாய்

யாழ். உரும்பிராய் கிழக்கில் மகளை கண்டித்த தந்தையை, தாய் தாக்கியதில் காயமடைந்த தந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மகள் தொலைபேசியில் அதிக நேரத்தை செலவிடுவதாக தந்தை கண்டித்துள்ளதுடன், மகளிடமிருந்த தொலைபேசியை வாங்கிய தந்தை அதிலிருக்கும் விடயங்களை பார்வையிட்டுள்ளார்.

இதனால் உருவான வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையில் மகளின் முன்னால் தந்தையை தாக்கிய தாய் அவரது மண்டையை உடைத்துள்ளார்.

இதில் காயமடைந்த தந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4,7)

## தடுப்பூசி வழங்கும் வாராந்த தரவுகளை அனுப்புங்கள்

### வடக்கு ஆளுநர் பணிப்புரை

வடமாகாணத்தில் கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் வாராந்த தரவுகளை தமக்கும் அனுப்பும்படி ஆளுநர் ஜீவன் தியாகராஜா சுகாதாரத் துறை அதிகாரிகளை பணித்துள்ளார்.

நாட்டில் தற்போது கோவிட் - 19 தாக்கம் மீணடும் அதிகரித்துள்ள நிலையில் தடுப்பூசி ஏற்றுக் கொள்ளாதவர்கள் தமது பிரிவுகளில் உள்ள சுகாதாரத் தரப்பினரின் அறிவுறுத்தல்களுக்கு அமையப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் கூறினார்.

மேலும் வடமாகாணத்தில் கட்டணம் செலுத்தப்படும் சுகாதாரத்துறை சார்ந்த சமூக பராமரிப்பாளர்களை மாகாண கூட்டுறவின் கீழ் இணைத்து அவர்களுக்கான NVQ பயிற்சிகளை வழங்கி சேவையில் ஈடுபடுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (4,7)

## நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 6 ஆம் திருவிழாவான இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.45 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தினால் புல்லாங்குழல் இசை இடம்பெறவுள்ளது.

இதன்போது புல்லாங்குழல் -யூட் பெனியல், வயலின் -ஆர். நிரோஜன், மிருதங்கம்-எம்.சுலக்சன் ஆகியோரால் நிகழ்த்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 7.15 மணிக்கு நடைபெறவுள்ள இசையரங்கில் பாட்டு-சிவநாதன் பிரதீபன், வயலின்-அ. ஜெயராமன், மிருதங்கம்-ம.லோகேந்திரன்,கெஞ்சிரா-ஞா.வசந், முகர்சிங்-நி.மோகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)

## நாணய நிதியம் மூலம் இலங்கை மீளும்

### ஜப்பான் பிரதமர்

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையை எதிர்பார்ப்பதாக ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல்கள் மூலம் இலங்கையின் அபிவிருத்திக்கு விரைவான முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்ப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுதந்திரமான மற்றும் திறந்த இந்து-பசுபிக் கொள்கைக்கு ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜப்பானிய பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.(4,7)

## செல்வச்சந்நிதி முருகனுக்கு 27 ஆம் திகதி கொடியேற்றம்

(குப்பிழான்)

"அன்னதானக் கந்தன்" எனப் போற்றிச் சிறப்பிக்கப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். வடமராட்சி தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இவ்வாலய மஹோற்சவப் பெருவிழா நடைபெற உள்ளது.

இவ்வாலய மஹோற்சவத்தில் அடுத்தமாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பூங்காவன உற்சவமும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் கைலாசவாகன உற்சவமும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் சப்பரத் திருவிழாவும், 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தோற்சவமும் அன்றையதினம் மாலை 6 மணியளவில் மௌனத் திருவிழாவும் இடம்பெறும். (4,7,18)

## இந்தியா செல்ல முயன்ற 8 பேர் விளக்கமறியலில்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பு ஊடாக சட்ட விரோதமான முறையில் இந்தியாவிற்குச் செல்ல முயன்ற நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 13 பேரில் 8 சந்தேகநபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நேற்று சனிக்கிழமை உத்தரவிட்டார்.

சட்டவிரோதமாக இந்தியா செல்ல முயற்சித்த 13 பேர் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தலைமன்னாரில் இருந்து தொலைவில் உள்ள 6 ஆம் மணல் திட்டில் படகோட்டியினால் இறக்கி விடப்பட்ட நிலையில் அதிகாலை அவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் உள்ளடங்கலாக 13 பேர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் நேற்று சனிக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் 8 நபர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.


ஏனைய 5 சிறுவர்களையும் சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகள் ஊடாக உரிய பாதுகாவலரிடம் ஒப்படைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வான் அருகே சீனா போர் ஒத்திகை

(பீஜிங்)

**தாய்வான் மீதான தாக்குதலுக்கான ஒத்திகை போன்ற போர்ப்பயிற்சியில் நேற்று சனிக்கிழமை சீன விமானங்கள் மற்றும் போர்க்கப்பல்கள் ஈடுபட்டுள்ளதாக தாய்வான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**



தங்களது கடும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வானுக்கு பயணம் மேற்கொண்டதற்குப் பதிலடியாக தாய்வான் அருகே சீனா போர்ப்பயிற்சிகளை நேற்று ஆரம்பித்தது.

சீன போர்க்கப்பல்கள் தாய்வான் - சீனாவை பிரிக்கும் அதிகாரபூர்வமற்ற எல்லைக் கோட்டை கடந்தன. இது ஆத்திரமூட்டலின் ஒரு பகுதியாகும் எனவும் தாய்வான் கூறியுள்ளது.

சீனாவின் ஆத்திரமூட்டல்களை அடுத்து தாய்வான் இராணுவம் முழு எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வான்படைகள் மற்றும் கப்பல்களை தயார் நிலையில் வைத்துள்ளது. (4)

## உலகின் மிகப்பெரிய கலை விழா ஆரம்பம்





(எடின்பரோ)

உலகின் மிகப்பெரிய கலை விழாவின் தொடக்கத்திற்காக உலகம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான கலைஞர்கள் எடின்பரோவில் ஒன்று கூடியுள்ளனர்.

'எடின்பர்க் திருவிழா பிரின்ஞ்' அதன் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 58 நாடுகளில் இருந்து 3,000 இற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துகின்றது.

அதன் வரிசையில் நகைச்சுவை நடிகர்களான பிரான்கி பாயில், ஸ்டீவர்ட் லீ மற்றும் அல் முர்ரே ஆகியோரின் நிகழ்வுகளும் அடங்கும். (4)

## அமெரிக்காவில் தீ விபத்து 10 பேர் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் தீப்பற்றி எரிந்த வீடொன்றுக்குள் இருந்து மூன்று சிறுவர்கள் உள்ளிட்ட 10 பேர் உடல் கருகிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் ஐந்து, ஆறு மற்றும் ஏழு வயதுடைய சிறுவர்கள் இன்னும் அடையாளம் காணவில்லை என பென்சில்வேனியா பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் குறித்து குற்றவியல் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. (4)

# தாய்லாந்தில் உள்ள விடுதியில் பயங்கர தீ விபத்து

- 13 பேர் பலி
- 40 பேர் படுகாயம்

(பாங்கொக்)

தாய்லாந்தில் இரவுநேர மதுபான விடுதியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 13பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 40 பேர் படுகாயமடைந்தனர்.

பாங்காக்கிலிருந்து தெற்கே சுமார் 150 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சோன்புரி மாகாணத்தின் சத்தாஹிப் மாவட்டத்தில் உள்ள மவுண்டன் பி நைட்ஸ்பாட் என்ற இடத்தில் அதிகாலை 1 மணியளவில் நேற்று முன் தினம் இந்த தீ விபத்து ஏற்பட்டது.

உயிரிழந்தவர்களில் நான்கு பெண்கள் மற்றும் ஒன்பது ஆண்கள் அடங்குவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படுகிறது. வெளிநாட்டவர்களுடன் தொடர்புடைய இறப்பு பதிவாகவில்லை. (4)

# ஆப்கானில் குண்டு வெடிப்பு 8 பேர் பரிதாப பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பில் 8 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 18 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு 'இஸ்லாமிய தேசிய பயங்கரவாத அமைப்பு' உரிமை கோரியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் தீவிரவாதிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் பல்வேறு இஸ்லாமிய ஆயுதக் குழுக்கள் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள் என்றும் இந்த தாக்குதலை வன்மையாக கண்டிப்பதுடன் தாக்குதலுக்கு காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தலிபான் அரசு தெரிவித்துள்ளது. (4)

# அமெரிக்கா உடனான பேச்சுவார்த்தைகள் இரத்து

## சீனா அறிவிப்பு



(பீஜிங்)

மக்கள் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் பயண எதிரொலியாக, அமெரிக்காவுடன் நடைபெறவிருந்த முக்கிய பேச்சுவார்த்தைகளை சீனா இரத்து செய்துள்ளது.

இதுதொடர்பாக சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'காலநிலை மாற்றம் தொடர்பாக அமெரிக்கா – சீனா இடையே நடைபெறவிருந்த சந்திப்பை இரத்து செய்கிறோம். மேலும், பாதுகாப்பு தொடர்பாக நடைபெறவிருந்த இராணுவத் தலைவர்களின் சந்திப்பையும் இரத்து செய்கிறோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# அணு ஆயுத பரிசோதனைகளுக்கு தயாராகின்றது வடகொரியா

(பியாங்யாங்)

வடகொரியா அமெரிக்காவிற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாக விளங்கும் நாடு என்பது குறிப்பிடத்தக்கது. வடகொரியா ஆயுத உற்பத்தி மற்றும் அமெரிக்காவின் இராணுவத்திற்கு சமபலம் பொருந்திய இராணுவத்தை உருவாக்குவது என்பது தொடர்பில் இரகசியமான கட்டமைப்புக்களை மேற்கொண்டு வருவதாக சர்வதேச 'ராய்ட்டர்ஸ்' செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அணு ஆயுத பரிசோதனையினை மேற்கொள்ள இருப்பதாக வடகொரிய ஜனாதிபதி கிம் மை மேற்கோள்காட்டி செய்திகள் வெளி வந்துள்ளன.

அணு ஆயுத பரிசோதனைகளுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை வடகொரியாவிற்கு தடை விதித்திருந்த போதிலும் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்தே வடகொரியா அணு ஆயுதத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் வடகொரியாவின் அணு ஆயுத பரிசோதனை மையம் அமைந்திருக்கும் 'புங்கெய்ரி' என்னும் இடத்தில் தொடர் ஆய்வுகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை சர்வதேச செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. (4)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எரிவாயு,...

சிலிண்டரின் விலை குறைக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோகிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டர் 200 ரூபாயிற்கு மேல் குறைக்கப்படவுள்ளது.

அத்துடன் உணவுப் பொதியினதும், தேநீரினதும் விலைகளை குறைக்க உள்ளதாக சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் திங்கட்கிழமை எரிவாயுவின் விலையும் குறைக்கப்பட உள்ளமையால் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். (4-7)

## இலங்கை இரா...

வத்தினரையும் கைது செய்ய அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே அவர்களை கைது செய்ய சர்வதேச நீதி அமைப்பை அணுக வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு மட்டுமே இலங்கை இராணுவ அதிகாரிகள் செல்லமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## விமான சேவை...

விமான நிலையம் வரை இந்த சேவை முன்னெடுக்கப்படும்.

அடுத்த வாரம் விமான சேவை ஆரம்பிக்கப்படும் என்று வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பலாலி விமான நிலையத்தில் இருந்து இரத்மலானை விமான நிலையத்திற்கும் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. (4-7)

## அமைச்சுப் பொறு...

துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பொது வேலைத்திட்டத்தை பலப்படுத்துவதற்கு தயாராக உள்ளமை தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி அதனை வரவேற்றார்.

அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்ளாது, அதற்காக போட்டியின்றி நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்க தயாராக இருக்கிறோம்.

பாராளுமன்றில் உள்ள 225 உறுப்பினர்களுக்கான தொகையை கூட ஒதுக்க முடியாத நிலையில் நாடு உள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (4-7)

## கொழும்பில்...

மாக பரவுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின், ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறைப் பிரிவு தெரிவித்துள்ளது.

24 கொரோனா நோயாளர்களின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில், 20 மாதிரிகளில், இந்தப் புதிய உப திரிபு கண்டறியப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் விசேட வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

BA-5 என்ற கொரோனா உப திரிபானது, கொழும்பில் வேகமாக பரவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், மேலும் சில கொரோனா நோயாளர்களின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

குறித்த வைரஸ் தொடர்பான புதிய தகவல்களை அதன் பின்னர் கண்டறிய முடியும் என விசேட வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். (4-7)

## இலங்கையின்...

விருத்தி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து பேணுவதற்கு எதிர்பார்ப்பதாக ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்குச் சாதகமான சூழலையும் ஸ்திரத்தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானதாக அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## 490 மில். ரூபா...

நோர்வே அரசாங்கம் சுமார் 490 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

உலக உணவுத்திட்டம், யுனிசெப் மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் ஆகிய அரச சார்பற்ற சர்வதேசக்கட்டமைப்புக்களின் இலங்கைக் கிளையிடம் வழங்கப்பட்டுள்ள இந்த நிதியுதவியின் மூலம் பின்தங்கிய சிறுவர்கள் மற்றும் பெண்களின் உணவு, போசனைத்தேவையைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (4-7)

## சர்வகட்சி வேலை...

அரசியல் கட்சிகளுடன் பல நாட்களாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஒவ்வொரு கட்சியும் முன்வைத்த முன்மொழிவுகள் நாளை திங்கட்கிழமை பங்குபற்றிய அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவாக வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக அரசாங்கம் தற்போது சில அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அந்த பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளது.

மேலும் இந்த கட்சிகளின் பல்வேறு கொள்கைகளை கொண்ட அணிகள் இருக்கின்றன. பேச்சுவார்த்தையில் பெரும்பான்மையான நிலைப்பாடுகளுக்கு இடமளித்து, சரியான வேலைத்திட்டத்தை நாட்டுக்காக முன்வைப்பது இதன் நோக்கம் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (4-7)

## அரசு...

ததுடன் ஆங்காங்கே வன்முறைகளும் இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய நாட்டைவிட்டு சென்றதுடன் தனது பதவியையும் இராஜினாமா செய்திருந்தார். தொடர்ந்து பாராளுமன்றில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் நீதிமன்ற உத்தரவுப்படி காலி முகத்திடலில் தொடர் போராட்டத்தில் இருந்தவர்களை படையினர் அப்புறப்படுத்தியிருந்ததுடன், போராட்டத்தின்போது அரச சொத்துக்களை சேதம் விளைவித்தவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர். (4-7)

# கொட்டகலையில் மண்சரிவு

## வீடுகள் சேதம்

(கொழும்பு)

மழை காரணமாக, கொட்டகலை தகரமலை பிரிவிற்குட்பட்ட ஸ்டோனிகிளிப் தோட்ட நெடுங்குடியிருப்பில் உள்ள மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

இந்த சம்பவம் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இதன்போது மூன்று வீடுகளில் உள்ள சுவர்கள் இடிந்து விழுந்துள்ளதுடன், சமையலறையிலிருந்த பொருட்கள் அனைத்தும் சேதமாகியுள்ளன.

அத்துடன் குடியிருப்பு பகுதிகளில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளன. (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2022/08/06
சீட்டிழுப்பு இலக்கம் 4839
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 5 8 8 0 3 2
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.06
சீட்டிழுப்பு இலக்கம் 148
வெற்றி இலக்கங்கள்
மீனம் 01 23 31 54 மீனம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 06/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1187
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
F 04 28 32 36 51

கொவிசெத
திகதி 2022.08.06
சீட்டிழுப்பு இலக்கம் 3081
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Z 16 19 27 39
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.08.06
சீட்டிழுப்பு இலக்கம் - 869
H 31 35 51 55
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1640
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.08.06
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,812,580/-
வெற்றி இலக்கங்கள் 08 17 57 69
ஆங்கில எழுத்து V
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.08.06
சீட்டிழுப்பு இல: 3975
வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,758,340/-
வெற்றி இலக்கங்கள் 19 23 32 42
ஆங்கில எழுத்து M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,393,599.40
திகதி 2022-08-06
வெற்றி வாரம் 3526
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 16 34 39 46
மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,280,240/-

25 லக்ஷபதி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 03 11 19 37 73
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 252,019,015/-
சீட்டிழுப்பு வாரம் 990
வர்ணம் சிவப்பு
திகதி 2022.08.06 சனிக்கிழமை
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 516 / திகதி 2022-08-06 / வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 05 51 70
விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,711,952/-
அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1814
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.08.06
தினம் சனிக்கிழமை
J 03 04 05 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,959,080/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

பிறப்பு – 1982 மார்கழி
இந்து விவாகரத்து ஆனவர்
நட்சத்திரம் – ரேவதி
உயரம் – 5' 10"
தொழில் – அரச தாதிய
உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு – குடும்ப பொறுப்புணர்ச்சி
மிக்கவர் (12270)

**077 325 8942**

## மணமகன் தேவை

இந்து உயர் கௌரவ குடும்பத்தைச்
சேர்ந்த 32 வயதுடைய
யாழ். பல்கலைக்கழக (கலைப்பிரிவு)
விரிவுரையாளருக்கு தாவர
உணவுண்ணும் மணமகள் தேவை.
செவ்வாய் 4 கி.பா 31½
பெற்றோர் மட்டும்
தொடர்பு கொள்ளவும். (12345)

தொடர்புகளுக்கு
**077 575 9514**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (12134)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.
TP: 077 780 3970, 074 007 1970

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
## Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயணப் பொருட்களை கொள்வன்வு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

போலி இரசாயனத்துடன்,
போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து
வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

உலகத்தரம்மிக்கது
வட மாகாணத்தில்
முதன் முதலில் அறிமுகம்
செய்தவர்கள் (12373)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**North and East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## காணி விற்பனைக்கு

58/1, பழம் வீதி, சுந்தர்மடம்,
யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3
பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(பலாலி வீதி, திருநெல்வேலி
கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம்
வீதியில் சுமார் 200 m தூரம்
அளவில்) (C-4695)

தொலைபேசி:
**077 977 3732**

## சமையல் ஆள் தேவை

இந்திய உணவு வகைகள் (சைவ,
அசைவ), நாண் ரொட்டி, சப்பாத்தி,
தோசை வகைகள், கொத்து ரொட்டி
செய்யக்கூடியவர் தேவை. (12340)

**077 652 9583**

## Sb Travels & Tours Pvt Ltd

சகல விதமான விமான பயணச்சீட்டுகளிற்கான நேரடி முகவராக IATA Agent ஆக செயற்படும் SB Travels and Pvt Ltd சகல நாடுகளிற்கான விமான பயணச்சீட்டுகள், Travels Itinerary, Travel Insurance, Dubai, Malasiya, India, Bangkok விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஐரோப்பிய நாடுகளிற்கான விசா விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து தரப்படும் மற்றும் விமானப் பயணத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தருகிறது.

**தற்போது Colombo to Chennai 65,900/= மட்டுமே**
**(நிபந்தனைக்கு உட்பட்டது)**

தொடர்புகளிற்கு:
**Sb Travels & Tours Pvt Ltd**
**No.198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P : 021 222 8555/ 021 222 9555**
**Mobile Number : 076 691 1082, 076 691 1083**
**Email : sbTravelsjaffna@gmail.com**
**Sb Travels Colombo head office**
**No- 0112 540 280, 0771 083 481, 0112 333 322** (C-4711)

## பதவி வெற்றிடங்கள்

யாழ். நகரில் பிரபல வைத்தியசாலை பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கிறது.
- மருந்தக உதவியாளர்
- வைத்திய உதவியாளர்
- களஞ்சிய உதவியாளர்
- வரவேற்பாளர்
- காசாளர்

- கவர்ச்சிகரமான ஊதியத்துடன் மேலதிக அனுகூலங்களும் வழங்கப்படும்.
- யாழ். நகரை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் மட்டும் உங்கள் சுயவிபரக் கோவையினை வைத்தியசாலை வரவேற்பு பகுதியில் கையளிக்கவும். (12368)

மேலதிக தொடர்புகளுக்கு
**077 120 3763**

## காணி விற்பனைக்கு

**யாழ். நாவற்குழி சந்தியில் 54 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**
- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம். (12311)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

**076 490 5403, 076 491 2493, 076 490 6029**

## 13வது நினைவாண்டும் 33வது பிறந்தநாள் வாழ்த்தும்



### அமரர் சிறினிவாசன் சுபோதினி

எங்கள் முற்றத்து முழுநிலவு
மறைந்து 13 ஆண்டுகள் ஆனதுவோ
உன்னை எண்ணாத நாளேது
நினைக்காத பொழுது ஏது

காலம் எங்கள் கண்ணாய்
இருப்பாய் என்றிருக்க
கண்ணீரில் எங்களை மிதக்கவைத்து
நொடிப்பொழுதில் மறைந்தாயோ...

எங்கள் மகிழ்வு எல்லாம் நீ உள்ளவரைதான்
இனியேது வாழ்வில் மகிழ்ச்சி
நாளும் பொழுதும் ஏங்கித் தவிக்கின்றோம்
மீண்டும் ஓர் நாள் பிறந்துவா...



மலர்வு 1989.08.07
உதிர்வு 2009.01.19

4ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு. (12347)

அன்புடன்:-
அம்மா, அப்பா,
தம்பி, அண்ணாமார்

## யாழ்ப்பாணம் மாசற்ற மாநகரம்

யாழ்ப்பாணம் மாசற்ற மாநகரம்

நல்லைக் கந்தன் உற்சவ காலத்தினை முன்னிட்டு
சுவடி நிறுவகத்தால் நடாத்தப்படும்

### பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப்போட்டி - 2022

**பிரிவுகளும் தலைப்புக்களும்**

ஆரம்பப்பிரிவு : தரம் 03 – 05
**'நமது வீட்டுச் சூழலை மாசற்றதாக மாற்றுவோம்'**
இடைநிலைப்பிரிவு : தரம் 06 – 08
**'நாம் காண விரும்பும் மாசற்ற மாநகரம்'**
மேற்பிரிவு : தரம் 09 – 11
**'கழிவுகளை மலையாய் உருவாக்கும் பொறிமுறைக்கு முடிவு கட்டுவோம்'**

**பரிசுகளும் பாராட்டும்**
- ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பான ஐந்து ஓவியங்களிற்குப் பரிசுகளும் பங்கு பற்றும் அனைத்து மாணவர்களிற்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- தெரிவு செய்யப்பட்ட தரமான ஓவியங்கள் எம்மால் ஒழுங்கு செய்யப்படவுள்ள ஓவியக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

**போட்டி விதிகள்**
- பொருத்தமான A4 அளவுள்ள தாளில் விரும்பிய வர்ண ஊடகத்தினைப் பயன்படுத்தி வரையுங்கள்.
- அனுப்புபவரின் பெயர்,கைத்தொலைபேசி இலக்கம், முழுமையான கடித முகவரியுடன் கீழ்க்காணும் முகவரிக்கு 28.08.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகத் தபாலில் அனுப்பிவையுங்கள்.
- மேலதிக விபரங்களை அறிய 077 986 6409, 077 245 3108 என்ற இலக்கங்களை வட்சப்பில் தொடர்பு கொள்ளலாம். (12349)

சுவடி நிறுவகம்,
எழுதிரள், 209, பலாலி வீதி,
கோண்டாவில்.

www.suvadi.net
0094 21 222 5529
md@suvadi.org

செயற்றிட்ட அனுசரணையாளர்கள்
comdu.it CFLI/FCIL Canada Fund for Local Initiatives Fonds canadien d'initiatives locales

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.